# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,864 – 1969 ජූලි 25 වැනි සිකුරාදා — 1969.7.25

14,864 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு யூலை மாதம் 25 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 797 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 822 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 822 | அநந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 829 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


### பதவிகள் — வெற்றிடம்

**" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "**

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

***5. வேண்டிய தகைமைகள்.***—*விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

***6. யுத்தசேவைச் சலுகை.***—*ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

***7. பிற தேவைகள்.***—*(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.***—*தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. AA 58/X. 2117/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி : இலத்திரவியல், தொலைச் செய்திப் போக்குவரத்து விரிவுரையாளர், II ந் தரம்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இலங்கை தொழில் நுட்பவியல் கல்லூரியில் இலத்திரவியல், தொலைச்செய்திப் போக்குவரத்து விரிவுரையாளர், II ந் தர பதவிக்கு அல்லது அதற்கு வேண்டிய பயிற்சி அளித்தற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டு :

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.8.8.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.8.15

**குறிப்புகள்—**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வர விருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு: —ரூ. 4,080—360—8,400 வருடாந்தம்.

**குறிப்பு—**

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான முதுமானி அல்லது கலாநிதி போன்ற அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமைகள் பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 5,160 பெறுதற்கு உரித்துடையவராவர்.

(ii) ஓர் ஆசிரியர் கலாசாலை அல்லது ஒரு சிரேட்ட தொழில்நுட்ப நிலையம் அல்லது கட்டுபெத்த இலங்கைத் தொழில்நுட்பவியல் கல்லூரி அல்லது உயர்ந்த தரத்தய அல்லது சமனுன தரத்தய அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகளும் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 5,160 வழங்கப்படுதற்குச் சீர்தூக்கப்படுவார்கள்.

(iii) லண்டண் குடசார் எந்திரவியல் அல்லது மின்சார எந்திரவியல் அல்லது பொறிமுறை எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவனத்தகைமை போன்ற பூரண உயர் தொழில் தகைமை பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 7,320 பெறுதற்கு உரித்துடையவராவர்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்து எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ந் தர விரிவுரையாளர்கள், அவர்களுடைய சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப்படியை—அதாவது வருடாந்தச் சம்பளம் ரூ. 8,400 ஐ அடைந்து அச்சம்பளப் படியில் ஒரு வருடம் கடமை புரிந்த பின், வருடாந்தம் ரூ. 480 சம்பள உயர்ச்சிப் பணமாகப் பெற்று வருடாந்தம் ரூ. 10,800 வரும்வரை சம்பளம் பெறலாம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வதாக திருப்திகரமான சான்று காட்ட வேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969.8.8 அன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் விஞ்ஞான முதுமானி எந்திரவியல் பட்டம், இலத்திரவியல் தொலைச் செய்திப் போக்குவரத்துப் பாடங்களுடன், பெற்றிருக்க வேண்டும்,

அல்லது

(ii) மின்சார எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவனத்தின் பரீட்சையின் I ம், II ம், III ம் பகுதிகளில் தேறியிருப்பதுடன் தொலைச் செய்திப் போக்குவரத்தில் 3 வருட அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்,

அல்லது

(iii) மின்சார எந்திரவியல் வழங்கப்படும் உயர்தர தேசிய தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் தொலைச் செய்திப் போக்குவரத்தில் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பித்தற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத் தேர்ச்சி பெற வேண்டும்.

5. **பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல் தொடர்பில் அமையும் விதிகளும் நிபந்தனைகளும்.**—(i) மேற்படி 4 ம் பந்தியில் கொடுப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் எவர்களிடமிருந்தாவது விண்ணப்பங்கள் வராவிடின், இப்பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரிகள் எவராவது இல்லாவிடின், பயிற்சியாளராக நியமனம் பெறுவதற்கு பின்வரும் தகைமைகளையுடையவரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படும் :—

(அ) **வயது** : 1969.8.8 அன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயுமாக இருக்க வேண்டும். (வயதெல்லை சகலருக்கும் ஏற்புடையதாகும்).

(ஆ) பௌதிகத்தில் (விசேட) அல்லது பௌதிகம், தூய, பிரயோக கணிதம் ஆகிய பாடங்களுடன் பொது விஞ்ஞான I ம் வகுப்பு அல்லது II ம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர் வெளி தேசத்தில் பயிற்சி பெறும்படி வேண்டப்படலாம். பயிற்சிக் காலத்தில் தகுதியான சகாயப் பணமளிக்கப்படும்.

(iii) தெரிவு செய்யப்பட்டவர் வெளி தேசத்தில் பயிற்சி பெற நேரிடின் அவர் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

செய்வதாக உறுதிப்படுத்தும் பிறவற்றுள், குறித்த பயிற்சியை நம்பிக்கையுடனும் கெட்டித்தனமாகவும் செய்து, திருப்திகரமாகப் பயிற்சியை முடித்து, அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் விரும்பின் (அரசாங்கம் தீர்மானிக்கும்) குறித்த ஒரு காலத்துக்கு அதன் சேவையிலீடுபடுவதாகவும்,

உடன்படிக்கையின் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக நடக்கத்தவறின் இலங்கை அரசாங்கத்துக்கு, இப் பயிற்சி முழுவதற்குமாக இலங்கை அரசாங்கத்தால் அல்லது புலமைப் பரிசில் வழங்கும் ஸ்தாபனத்தினால் அல்லது இரண்டினாலும் செலவழிக்கப்பட்ட சகல செலவினங்களையும் (உதாரணமாக சம்பளம், சகாயப்பணங்கள், பிரயாணச் செலவு, பிற செலவுகள் ஆதியன) திருப்பிக் கொடுப்பதாக உறுதிப்படுத்துவதாகவும் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(iv) இலத்திரனியல், தொலைச் செய்திப் போக்குவரத்துப் பாடங்களுடன் மின்சார எந்திரவியல் பட்டம் ஒன்றினை தெரிவு செய்யப்படும் அபேட்சகர் பெறவேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு : இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர் தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக் உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்கமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இந்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள, அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். இவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1969.7.18.

7–1146/1—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

A 42/X 2118/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### மகரகம, அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பொதுப்பாடங்களில் விரிவுரையாளர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள மகரகம அரசினர் (சிங்கள மொழி மூல) ஆசிரியர் கலாசாலையில் பொதுப் பாடங்களிலான விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.8.8

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.8.13

**குறிப்பு :** (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகாரக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா வென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(அ) இப்பதவிகள் நிரந்தரமானவையும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையனவுமாகும். இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுதற்குமுன், உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ், ஆசிரியர்களாக உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை வகித்த நியமதாரிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் இப்பதவிகளை வகிக்கும்வரை அவை உபகாரச் சம்பள உரித்துடையனவாகப் பிரகடனஞ் செய்யப்படும்.

(ஆ) இப்பதவிகளுக்கான காலியிடங்கள் மகாரகம ஆசிரியர் கலாசாலையில் உண்டு. எனினும், தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களில் ஒருவர், ஹாடி தொழில்நுட்பப்பயிற்சி நிலையத்தில் விவசாயப் பயிற்சி நெறியைப் பின்பற்றும் மாணவர்களுக்கு கல்வியிலும் உளநூலிலும் விரிவுரையாற்றுதற்பொருட்டு, அங்கு நியமிக்கப்படக்கூடும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும் :** இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு : ரூ. 5,160— 9 × 360– ரூ. 8,400/- வருடாந்தம்.

**4. தேவையான தகைமைகள் :**

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1969 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 8 ந் திகதியன்று 28 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) .

(இ) பட்டப்படிப்பு அல்லது வேறு பயிற்சியின் பின் கற்பிப்பதில் குறைந்த பட்சம் ஒரு கழக ஆண்டுக் கால முழுநேரப் பயிற்சி ஒன்றினை அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் பின்பற்றிய ஒரு பட்டதாரியாக இருக்க வேண்டும். பட்டம் பெற்றபின் குறைந்த பட்சம் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருப்பதுடன் தாம் விண்ணப்பிக்கும் பதவிக்குப் பொருத்தமான பாடத்தில் அல்லது பாடங்களில், கீழ்க்காணும் முறையில், உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும் :

(1) கல்வியும் உளநூலும் பயிற்றப்பட்ட பட்டதாரிகள்

| | |
|---|---|
| (2) கணிதம் | தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம், ஆகிய பாடங்களுடன் பட்டம். |
| (3) வர்த்தகம் | வர்த்தகத்தில், பொருளாதாரத்தில் அல்லது தொழில் நிர்வாகத்தில் பட்டம். |
| (4) ஆங்கிலம் | ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம். |

(ஈ) சிங்களத்தில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மூ. கு. : ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு:** (1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள் பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது). அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாசரபை.

அரசாங்க சேவை அதிகார அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969.7.18.

7–1146/2—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

இல. A. 43/X 2119/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் பொதுப் பாடங்களில் விரிவுரையாளர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள பலாலி அரசினர் (தமிழ் மொழிமூல) ஆசிரியர் கலாசாலையில் பொதுப் பாடங்களிலான விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும் :

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.8.8

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.8.15

**குறிப்பு :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பு மாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையினுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர் பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண் ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப் பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படி வங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும் பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர் கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.— இலங்கை அரசாங் கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப் பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோக கத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—**

(அ) இப்பதவிகள் நிரந்தரமானவையும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையனவுமாகும். இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுதற்கு முன், உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ், ஆசிரியர்களாக, உபகாரச் சம்பள உரித்துடைய பதவிகளை வகித்த நியமதாரிகளைப் பொறுத்தவரை யில் அவர்கள் இப்பதவிகளை வகிக்கும் வரை அவை உபகாரச் சம்பள உரித்துடையனவாகப் பிரகடனஞ் செய்யப்படும்.

(ஆ) இப்பதவிகளுக்கான காலியிடங்கள் பலாலி ஆசிரியர் கலாசாலை யில் உண்டு. எனினும், தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இத்தீவிலுள்ள எவ்வாசிரியர் கலாசாலைக்கும் நியமிக்கப்படக் கூடும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு.—ரூ. 5,160—9 × 360—ரூ. 8,400 வருடாந்தம்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடைய வராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1969 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 8 ந் திகதியன்று 28 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) பட்டப்படிப்பு அல்லது வேறு பயிற்சியின் பின் கற்பிப்பதில் குறைந்த பட்சம் ஒரு கழக ஆண்டுக் கால முழுநேரப் பயிற்சி ஒன்றினை அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் பின்பற்றிய ஒரு பட்டதாரியாக இருக்க வேண்டும். பட்டம் பெற்றபின் குறைந்த பட்சம் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருப்பதுடன் தாம் விண்ணப்பிக்கும் பகுதிக்குப் பொருத்தமான பாடத்தில் அல்லது பாடங்களில், கீழ்க்காணும் முறையில், உயர்ந்த தகைமை கள் பெற்றிருக்க வேண்டும் :

(1) வர்த்தகம்—வர்த்தகத்தில், பொருளாதாரத்தில் அல்லது தொழில் நிர்வாகத்தில் பட்டம்.

(2) விஞ்ஞானம்—இரசாயனவியல், விலங்கியல் ஆகியவற்றுடன் விஞ்ஞானத்தில் பட்டம்.

(3) கணிதம்—தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களுடன் பட்டம்.

(4) ஆங்கிலம்—ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம்.

(5) கல்வியும் உளநூலும்—பயிற்றப்பட்ட பட்டதாரிகள்.

(ஈ) தமிழில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங் களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங் குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமை யை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையா யினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயளாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப் படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரி யிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தி யோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண் டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட் சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலி ருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித் தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ.இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1969.7.18.

1146/3—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

இல. AA 62/X2120/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பதவி : வேலைக்கள எந்திரவியலாளர், II ந் தரம்**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள " ஹாடி " சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் வேலைக்கள எந்திரவியலாளர், IIந் தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு-1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்:

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.8.8

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.8.15.

**குறிப்புகள் ;** (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமதுகடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்ப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடநலம் உடையவர்களாகயிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப் பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—**

இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையது மாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாறுதச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

**3. சம்பளமும் சகாயப்படிகளும்.—**

இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :— ரூ.4,080 360— ரூ. 8,400 வருடாந்தம்.

**குறிப்பு :**(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதி போன்ற அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமைகளைப் பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 5,160 பெறுதற்கு உரித்துடையவராவர்.

(ii) ஆசிரியர் கலாசாலை அல்லது சிரேட்ட தொழில்நுட்ப நிலையம் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அங்கீகரிக்கப்பட்ட சமமான அல்லது உயர்ந்த தரத்தைய நிலையம் போன்ற உயர்தர மட்டங்களில் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்ற பட்டதாரிகளும் ஆராம்பச் சம்பளமாக ரூ. 5,160/- அளிக்கப்படுதற்குச் சீர்தூக்கப்படுவார்கள்.

(iii) குடிசார் எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் நிறுவன அல்லது பொறிமுறை எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் நிறுவன அல்லது மின்சார எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் நிறுவன தகைமை போன்ற பூரண உயர்தொழிற் தகைமை பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடந்தம் ரூ. 7,320/- பெறுதற்கு உரித்துடையராவர்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ஆந் தர விரிவுரையாளர்கள் தமது சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப் படியை அதாவது; வருடாந்தம் ரூ. 8,400/- ஐ அடைந்து ஒரு வருடம் அச்சம்பளப் படியில் சேவை புரிந்தபின் ரூ. 480/- வீதம் வருடாந்த உயர்ச்சி சம்பளங்கள் பெற்று வருடாந்தம் ரூ. 10,800 வரை சம்பளம் பெறுதற்கு உரித்துடையவராவர்.

**4. தேவைப்படும் தகைமைகள். —**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராக திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969.8.8 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது).

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் பொறிமுறை எந்திரவியலில் வழங்கப்படும் எந்திரவியல் பட்டம் அல்லது சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது (ii) பொறிமுறை எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் நிறுவன தகைமைப் பரீட்சையின் (அ) ஆம் , (ஆ) ஆம் பகுதிகளில் தேறியிருப்பதுடன் வேலைக்களம் ஒன்றில் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது (iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப நிலையத்தால் வழங்கப்படும் எந்திரவியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் வேலைக்க கழகம் ஒன்றில் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பித்தற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துகுள் சிங்களத் தேர்ச்சி பெறவேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்:—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மூ. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு:** (1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக்கடைசித்திகதியன்று அல்லது அதற்குமுன் செயலானரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமாயினின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுப்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர்தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார
சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலாகம்,
கொழும்பு 1,1969.7.18.

7–1146/4—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

AA 65/X2121/69

## கல்வி கலாச்சார அலுவலகள் அமைச்சு

### குடிசார் எந்திரவியல் விரிவுரையாளர் I ஆந் தர பதவி அல்லது இப்பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல்

கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள " ஹாடி " சிரேட்ட தொழில் நுட்ப நிலையத்திலுள்ள குடிசார் எந்திரவியல் விரிவுரையாளர் I ஆந் தர பதவி அல்லது இப் பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.8.8.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.8.15.

**குறிப்புகள்** (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்** :—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**.—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்**.—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூ. 8,880—480—13,200 வருடாந்தம்.

(ரூ. 11,280 இல் இரு வருடங்கள் தங்கலும் ரூ. 11,760 க்கு முன் விணைத்திறமைகாண் தடையும் உண்டு)

4. **தேவைப்படும் தகைமைகள்**.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு 8 மாதம் 8 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் I ஆம் அல்லது II ஆம் வகுப்பு சிறப்பு விஞ்ஞான மாணி (எந்திரவியல்) பட்டம்—குடிசார் எந்திரவியல் பாடங்களுடன்.

(ii) குடிசார் எந்திரவியலாளர் கூட்டுறுப்பு நிறுவனத்தின் தகைமைப் பரீட்சை அல்லது குடிசார் எந்திரவியலில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் அல்லது கலாநிதிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(iii) அரசாங்க நிலையத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட நிலையத்தில் 5 வருட படிப்பித்தல் அல்லது செயல்முறை அனுபவம் அல்லது இரண்டு அனுபவங்களும்.

(iv) சிங்களத்தில் படிப்பித்தற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத் தேர்ச்சி பெறவேண்டும்.

5. **பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல் தொடர்பில் அமையும் விதிகளும் நிபந்தனைகளும்**.—(i) மேற்படி 4 ம் பந்தியில் கொடுபட்டுள்ள தகைமையுடையவர்கள் எவர்களிடமிருந்தாவது விண்ணப்பங்கள் வரா விடின், இப்பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரிகள் எவராவது இல்லாவிடின், பயிற்சியாளராக நியமனம் பெறுவதற்கு பின்வரும் தகைமைகளையுடையவரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் சீர்தூக்கப் படும் :—

(அ) வயது :—1969.8.8 அன்று 28 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (வயதெல்லை சகலருக்கும் ஏற்புடையதாகும்).

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் I ஆம் அல்லது II ஆம் வகுப்பு சிறப்பு விஞ்ஞான மாணி (எந்திரவியல்) பட்டம்–குடிசார் எந்திரிவியல் பாடங்களுடன்.

(இ) அரசாங்க நிலையத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட நிலையத்தில் 5 வருட படிப்பித்தல் அல்லது செயல்முறை அனுபவம் அல்லது இவ்விரு அனுபவங்களும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுவர் வெளி தேசத்தில் பயிற்சி பெறும்படி வேண்டப்படலாம். பயிற்சிக் காலத்தில் தகுதியான சகாயப் பணமளிக்கப்படும்.

(iii) தெரிவு செய்யப்பட்டவர் வெளி தேசத்தில் பயிற்சி பெற நேரிடின், அவர் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் :—

செய்வதாக உறுதிப்படுத்தும் பிறவற்றுகள், குறித்த பயிற்சியை நம்பிக்கையுடனும் கெட்டித்தனமாகவும் செய்து, திருப்திகரமாகப் பயிற்சியை முடித்து, அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் விரும்பின் (அரசாங்கம் தீர்மானிக்கும்) குறித்த ஒரு காலத்துக்கு அதன் சேவையிலீடுபடுவதாகவும்,

உடன்படிக்கையின் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக நடக்கத்தவறின் இலங்கை அரசாங்கத்துக்கு, இப்பயிற்சி முழுவதற்குமாக இலங்கை அரசாங்கத்தால் அல்லது புலமைப் பரிசில் வழங்கும் ஸ்தாபனத்தினால் அல்லது இரண்டினாலும் செலவழிக்கப்பட்ட சகல செலவினங்களையும் (உதாரணமாக சம்பளம், சகாயப்பணங்கள், பிரயாணச் செலவு, பிற செலவுகள் ஆதியன) திருப்பிக் கொடுப்பதாக உறுதிப்படுத்துவதாகவும் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் உயர்தொழில் தகைமைகளையேனும் குடிசார் எந்திரவியலில் பட்டப்பின் தகைமைகளையேனும் பெறவேண்டும்.

6. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப் பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு

(1) சாதானங்களேயாயினும் சாதனங்களின் படிகளேயாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

7. அரசாங்க சேவையினுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

9. அரசாங்க சேவையினுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

10. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம், 1969.7.18.

7—1146/5—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

இல. AA. 57/X.2122/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பொறிமுறை எந்திரவியல் I ஆந் தர பதவி அல்லது இப்பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள அம்பாறை, ஹாடி சிரேட்ட தொழில் நுட்ப நிலையத்தில் உள்ள பொறிமுறை எந்திரவியல், I ஆந்தர பதவிக்கு அல்லது இப் பதவிப் பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500 கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 8.8.1969

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 15.8.1969

**குறிப்பு** (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையினுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

**(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

**3. சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூ. 8,880—480—13,200—வருடாந்தம். வருடாந்தச் சம்பளம் ரூ. 11,280/– இல் 2 வருடங்கள் தங்கலும் வருடாந்தச் சம்பளம் ரூ. 11,760/– க்கு முன் வினைத்திறமைகாண் தடையும் உண்டு.

**4. தேவைப்படும் தகைமைகள் :**

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் பொறிமுறை எந்திரவியலில் வழங்கப்படும் I ம் அல்லது II ம் வகுப்புச் சிறப்பு விஞ்ஞானமாணி (எந்திரவியல்) தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ii) பொறிமுறை எந்திரவியலில் விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதிப் பட்டம் அல்லது பொறிமுறை எந்திரவியலாளர் கூட்டுறுப்பினர் தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(iii) அரசாங்க நிலையத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட நிலையத்தில் 5 வருட படிப்பித்தல் அனுபவம் அல்லது செயல்முறை அனுபவம் அல்லது இவ்விருவகை அனுபவங்களும் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் படிப்பதற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

**5. பயிற்சிக்கான புலமைப் பரிசில் அளித்தல் தொடர்பில் அமையும் விதிகளும் நிபந்தனைகளும் :**

(i) மேற்படி 4 ம் பந்தியில் கொடுபட்டுள்ள தகைமையுடையவர்கள் எவர்களிடமிருந்தாவது விண்ணப்பங்கள் வராவிடின் ; இப்பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரிகள் எவராவது இல்லாவிடின், பயிற்சியாளராக நியமனம் பெறுவதற்கு பின்வரும் தகைமைகளையுடையவரிமிருந்து வரும் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படும் :—

(அ) வயது : 1969.8.8. அன்று 26 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும். (வயதெல்லை சகலருக்கும் ஏற்புடையதாகும்).

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் பொறிமுறை எந்திரவியலில் வழங்கப்படும் I ம் வகுப்பு அல்லது II ம் வகுப்புச் சிறப்புப்பட்டம் பெற்றிருக்க வேண்டும் ;

(இ) அரசாங்க நிலையத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட நிலையத்தில் 5 வருட படிப்பித்தல் அனுபவம் அல்லது செயல்முறை அனுபவம் அல்லது இவ்விருவகை அனுபவங்களும் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர் வெளி தேசத்தில் பயிற்சி பெறும்படி வேண்டப்படலாம். பயிற்சிக் காலத்தில் தகுதியான சகாயப் பணமளிக்கப்படும்.

(iii) தெரிவு செய்யப்பட்டவர் வெளி தேசத்தில் பயிற்சி பெற நேரிடின், அவர் இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டும் :—

செய்வதாக உறுதிப்படுத்தும் பிறவற்றுள், குறித்த பயிற்சியை நம்பிக்கையுடனும் கெட்டித்தனமாகவும் செய்து, திருப்திகரமாகப் பயிற்சியை முடித்து, அதன் பின்னர் இலங்கை அரசாங்கம் விரும்பின் (அரசாங்கம் தீர்மானிக்கும்) குறித்த ஒரு காலத்துக்கு அதன் சேவையிலீடுபடுவதாகவும் ;

உடன்படிக்கையின் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக நடக்கத்தவறின் இலங்கை அரசாங்கத்துக்கு, இப்பயிற்சி முழுவதற்குமாக இலங்கை அரசாங்கத்தால் அல்லது புலமைப் பரிசில் வழங்கும் ஸ்தாபனத்தினுல் அல்லது இரண்டினுலும் செலவழிக்கப்பட்ட சகல செலவினங்களையும் (உதாரணமாக சம்பளம், சகாயப்பணகள், பிரயாணச் செலவு, பிற செலவுகள் ஆதியன) திருப்பிக் கொடுப்பதாக உறுதிப்படுத்துவதாகவும் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் உயர்தொழில் தகைமைகளை அல்லது பொறிமுறை எந்திரவியலில் பட்டப் பின் தகைமைகளைப் பெறவேண்டும்.

6. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகியவற்றில் சித்திடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு**.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களை சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிபிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

10. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிபிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1969 ந் ஆண்டு ஜூலை மீ 18 ந் உ.

7–1146/6—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

இல. AB 56/X. 2123/69

## சட்டவரைநர் திணைக்களம்

### உதவிச் சட்டவரைநர் பதவி

சட்டவரைநர் திணைக்களத்திலுள்ள உதவிச் சட்டவரைநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்ணுட்டு விண்ணப்பங்கள், 1969–8–8

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969–8–15

**குறிப்பு :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும்; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினுல் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருந்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற்றெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிருர்களாவெனபதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(அ) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர் கைம்பெண் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு உதவுதொகைகள் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர் மூன்றுண்டு காலத்துக்குத் தகுதிகாண்நிலையில் நியமிக்கப்படுவர்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—ஆண்டொன்றுக்கு ரூபா 8,880/– தொடங்கி 480 ரூபா கொண்ட ஒன்பது ஆண்டுக்கு சம்பள உயர்வுகளும் 600 ரூபா கொண்ட இரண்டு ஆண்டுச் சம்பள உயர்வுகளுமாக 14,400 ரூபா வரை (ஆண்டொன்றுக்கு 11,760 ரூபாவின் முன் திறமைத்தடையொன்றும் ஆண்டொன்றுக்கு 11,280 ரூபாவில் இரண்டாண்டுத் தரிப்பொன்றும்).

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடைய வராயுமிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத சேவையுள்ள உயர் நீதிமன்ற வழக்குறைஞராகவிருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக் குரிய பிரமாணத் தொகுப்பின்பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப் பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்ற தாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழிநுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழிநுட்பத்தகைமை பற்றிய சான் றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு :**

(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண் ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமாப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிப்பக்க படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப் பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப் பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் 1 ஆம் பாகம், 2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண் டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களின் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர் களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலா ளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
அ. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம், கொழும்பு 1.
1969–7–18.

7–1146/7.—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

No. AB/68/X.2124/69

## சௌக்கிய சேவைத் திணைக்களம்

### மருத்துவ உத்தியோகத்தர்கள் பதவிகள் (ஆரம்ப தரம்)

மருத்துவக் கட்டளைச் சட்டத்து (கப். 105) ஆர் எல். இ. 29 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவப் பயிற்சியாளர்களிடமிருந்தும், 70.9.30 இல் அல்லது அதற்குமுன்னதாக தங்கிப் பயிலும் பயிற்சி நெறியை நிறைவேற்றும் மருத்துவப் பட்டதாரிகளிடமிருந்தும், சௌக்கிய சேவைத் திணைக்களத்தில் சுமார் 145 மருத்துவ உத்தியோகத்தர்கள் (ஆரம்ப தரம்) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங் கள் கீழே அளிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களில் செய்யப்பட்டு 1969.8.8 அன்று அல்லது அதற்கு முன்னதாக செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகவரியில் கிடைக்கப்படல் வேண்டும்.

**குறிப்பு.**—(i) 1970.9.30 இல் அல்லது அதற்கு முன்னதாக தங்கிப் பயிலும் பயிற்சி நெறியை இலங்கை அரசினர் வைத்திய சாலையில் முடிக்கும் அல்லது முடித்த மருத்துவப் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(ii) விண்ணப்பப் பத்திரம் அல்லது அது சம்பந்தமான கடி தம் தபாலிற் காணமற் போய்விட்டது அல்லது தாம திக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டுக்கள் கவனிக்கப் படமாட்டா. இறுதி நாட்கள் வரையும் விண்ணப்பங் களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பகாரர்கள் தாங் களே இக்கஷ்டங்களுக்கு உள்ளாக நேரிடும்.

2. **நியமன நியதிகளும், சேவை நிபந்தனைகளும் :**

(அ) இப்பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பள உரிமையுடையது மாகும் ;

(ஆ) சொந்த மருத்துவச் செய்கையில் ஈடுபட உரித்துடையவராகார் ;

(இ) இந்நியமனம் 3 வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையிலிருக் கும்.

3. **வேதனமும், படிகளும் :**

இப்பதவிக்குரிய சம்பளத்திட்டம் பின்வருமாறு :—ஆரம்பதரம்— ரூபா 5,880 — 360 — ரூபா 6,240.

II ஆம் தரம் — ரூபா 6,960 — 4 × 360, 6 × 480 — ரூபா 11,280. (11,280 ரூபாவில் ஈராண்டு நிறுத்துகை) ;
I ஆம் தரம் — ரூபா 11,760 — 3 × 480 — ரூபா 13,200.

4. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களில் ஒன்றையோ அல்லது முழுவதையுமோ சமர்ப்பிக்கும்படி வேண்டப்படும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பரீட்சாத்தி இலங்கையரென்பதையும், அவரின் சரியான பிறந்த திகதியை அத்தாட்சிப்படுத்துவதற்காகவும், பிறப்புச்சாட்சிப் பத் திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும் ;

(பி. கு.—ஞானஸ்நானப் பத்திரங்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணங்களுக்காக வழங்கப் பட்ட பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா).

(ஆ) பட்டப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) உயர்தொழில் அல்லது தொழில்நுட்பச் சான்றிதழ் அல்லது இரண்டும் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சையின் சான்றிதழ்.

**குறிப்பு.**—(i) விண்ணப்பப் பத்திரத்துடன் சாதனங்களையோ அல்லது சாதனங்களின் பிரதிகளையோ இணைத்தல் கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படும்பொழுது சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

5. விண்ணப்பங்களும், அவை சம்பந்தமான வேறு தொடர்புகளும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிடப்பட்டு அனுப் பப்படல் வேண்டுமேயன்றி இத்திணைக்களத்தில் உள்ள எந்த உத்தியோ கத்தர்களுக்காயினும் நேராக அனுப்பப்படுதல் கூடாது.

6. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி, II ஆம் பிரிவில் வெளியிடப் பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காகிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டப்படு கின்றனர்.

7. விண்ணப்பங்கள் யாவும் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். இறுதித் திகதியிலிருந்து இருகிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற் றிய அறிவித்தலைப் பெறாத விண்ணப்பகாரர் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழு செய்லாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்

படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
தபாற் பெட்டி இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆடு யூலை மீ 18 ந வ.

## சௌக்கிய சேவைத் திணைக்களம்

**மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
2. ஆணா ? பெண்ணா ? : ————.
3. நாட்டினம் : ————. (வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா என்பதை விளக்கவும்)
4. முகவரி : ————.
5. பிறந்த திகதி : ————.
6. விவாகமானவரா அல்லது தனியாளரா ? : ————.
7. உங்களது பல்கலைக்கழகப் பயிற்சி நெறி பற்றிய பின்வரும் விபரங்களைத் தருக :—
   (அ) பல்கலைக்கழகத்தின் பெயர் : ————.
   (ஆ) சேர்ந்த திகதி : ————.
   (இ) விலகிய திகதி : ————.
   (ஈ) சித்தியெய்திய பரீட்சைகள், திகதிகளுடன் : ————. (இறுதிப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றவரா என்பதைக் குறிப்பிடவும்)
   (உ) தங்கிப் பயிலும் பயிற்சிநெறி முடிவடைந்த திகதியும் பயின்ற வைத்தியசாலையும் : ————.

என்னால் அளிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

7–1146/8—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

---

இல. A 53/X. 2125/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பதவி : வித்தியாதிபதி, II ந் தரம் (கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகள்)**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள (கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரி) வித்தியாதிபதி, II ஆந் தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.8.8.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.8.15.

**குறிப்புகள் :** (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும்; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**— இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(1) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவை சகாய நிதிநலன்களுக்கு அவர் உரித்துடையராவார்; இந்நோக்கத்திற்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5% செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படுபவர், ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான சேவையில் இல்லாவிடின் அவருடைய நியமனம், காரியத்துக்கேற்ப, மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அல்லது பரீட்சார்த்த முறையில் அமையும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்திலேனும் அவர் சேமலாப நிதிக்கு தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறார் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது அவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் ஆறு மாத காலத்திற்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.** — இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

புதிய முறைப்படி நியமிக்கப்படுபவர்களுக்கு—ரூ. 11,760—3 × 480—2 × 600—14,400 வருடாந்தம்.

புதிய முறைப்படி அல்லாது நியமிக்கப்படுபவர்களுக்கு—£ 840—4 × £ 30—2 × £ 40—£ 1,040 வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.** — ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு ஆகத்து மாதம் 8 ந் திகதியன்று 35 வயதுக்குக் குறையாதவராயும், 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) சி. பா. த. அல்லது க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியில் அல்லது இலக்கியத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும் அல்லது யாதேனும் ஒரு உயர்ந்த பரீட்சையில் உத்தியோக கடமைகளுக்கு உபயோகிக்கப்படும் மொழியில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(i) பிரதம வித்தியாதிகாரியாக 3 வருடங்களுக்குக் குறையாத சேவை அல்லது கல்வி ஆலோசகராக 5 வருடங்களுக்குக் குறையாத சேவை புரிந்திருக்க வேண்டும்; அல்லது

(ii) கல்வி அமைச்சின் கீழுள்ள ஒரு பகுதியில் அல்லது பல்கலைக் கழகம் போன்ற ஒரு நிலையத்தில் பதவி வகிப்பதுடன் வருடாந்தம் ரூ. 13,200 ஐ உச்சிப்படியாகக் கொண்ட ஒரு சம்பள விகிதத்தில் தற்பொழுது வருடாந்தம் ரூ. 9,840 என்ற சம்பளத்தைப் பெறுபவராய் இருக்க வேண்டும்.

**குறிப்பு.**—பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் :—

(அ) கல்வியில் பட்டப் பின் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரித்திட்டம் பற்றிய சிறந்த அறிவும் அது வகைப்படுவதில் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

(இ) கல்வி அபிவிருத்தி வேலைகளில் முயற்சியுடன் பங்குபற்றியிருக்க வேண்டும்.

(ஈ) விலக்களிக்கப்பட்டிராவிடின் கல்விச் சட்டம், அரசாங்க பிரமாணங்களும் விதிகளும் ஆகியவற்றில் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக்கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969.7.18.

7–1146/9—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

## மின்சார வேலைக்கு வெற்றிடம்

இரத்மலானையில் இருக்கும் பொதுவேலைத் திணைக்களத்தின் புது வீடுகள் நிர்மாணத்திட்டத்தில் நாள் கூலிக்கு III தர மின்சார வேலையில் வீடுகளுக்கு வயரிங் செய்யக்கூடியவர்களின் விண்ணப்பங்கள் 15.8.69 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தரம் | தேவைப்படும் தகைமைகள் | நாள் ஒன்றுக்கு கூலி ரூ. ச. |
|---|---|---|
| III | (1) எழுதவாசிக்கத் தெரிந்திருந்தல் வேண்டும். | |
| | (2) வீடுகளுக்கு, மற்றும் மின்சார உபகரணங்களுக்கும் வயரிங் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். | |
| | (3) மின்சார வேகத்திலிருந்து தப்பும் விதங்கள், மின் சுற்றின் வேகத்தைப்பற்றி தெரிந்திருக்க வேண்டும். | |
| | **வயது.** — விண்ணப்பதாரர் 20 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்டவராயிருக்கவேண்டும் மேற்படி குறிக்கப்பட்ட நாளில். | |
| | சம்பளம் :— நாற்படி .. | 1 80 |
| | அரசாங்க விகிதப்படி வாழ்க்கைச் செலவு, விசேஷ வாழ்க்கைப்படியும் வழங்கப்படும். | |

அத்தாட்சிப்பத்திரம் :—

தராதரப்பத்திரத்தைவிட கிராமசேவையாளர், தகுதியுடைய இருவரின் பத்திரம் (1968 தை மாதத்திற்கு பின் பெற்றவைகளாக இருத்தல் வேண்டும்). இவை நேர்முகப்பரீட்சையில் காட்ட வேண்டும். பிறப்புக் கொப்பியும் காட்ட வேண்டும்.

விண்ணப்பதாரர் பிரதான நிர்மாண பொறியியலாளர் (கட்டிடங்கள்) தபால் பெட்டி இலக்கம் 6, மொறட்டுவ என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். அவரின் தனிப்பட்ட முறையில அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

எச். சி. டி. த சில்வா,
பிரதான நிர்மாண பொறியியலாளர்
(கட்டடங்கள்).

தபால் பெட்டி இலக்கம் 6,
மொறட்டுவ.

7–1082—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

## இலங்கை இராணுவம்—படையினர் நியமனம்

இலங்கை இராணுவத்தின் நிரந்தரப்படையில் நேரடியான போர்வீரர்களாச் சேருவதற்குக் காலிஸ்தானங்கள் இருக்கின்றன.

(அ) இக்காலிஸ்தானங்களுக்கு எதிரே கேட்கப்பட்டுள்ள தகைமைகளையுடை விண்ணப்பகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| நியமனம் | கூறு | வேண்டிய விசேட தகைமைகள் |
|---|---|---|
| (i) படையினர்—(தொழில் முகாரி) கட்டட வேலை. பிரிவு " A " வகுப்பு III | இலங்கை பொறியியலாளர் தொழிற் சேவை | விண்ணப்பகாரர்கள இலஙகை நுண்தொழில் கல்லூரியில் சிவில் பொறியியலாளர் பகுதியில் அல்லது கார்டி நுண்தொழில் பயிற்சிக் கல்லூரியில் ஏதாவது ஒரு நெறியில் முதல்வருட பரீட்சையை பூர்த்தி செய்தவர்களாய் கட்டட வேலை ஒரு பாடமாக பயிற்சியடைந்திருத்தல் வேண்டும் |
| (ii) படையினர்—(தொழில் முகாரி) மின்சாரமும் இயந்திரமும் பிரிவு " A " வகுப்பு III | ஷை | இலங்கை நுண்தொழில் கல்லூரியில் அல்லது கார்டி நுண்தொழில் பயிற்சிக் கழகத்தில் கீழ்க்காணும் பாடங்களில் ஒன்று அல்லது பல பாடங்களில் ஏதாவது ஒரு நெறியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் :—<br>மின்சாரமும் காந்தசக்தியும்<br>மின்சாரத்தின் மூலப்பொருள்.<br>மின்சாரத்தின் தத்துவாராய்ச்சி 1. |
| (iii) படையினர்—(எழுதுவினைஞர் நுண்தொழில்) பிரிவு " B " | ஷை | விண்ணப்பகாரர்கள் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரணம்)ல் ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்குக் கூடாத முறையில் அல்லது சிரேட்ட தராதரப் பத்திரப்பரீட்சையில் தட்டெழுத்து பாடத்தில் திறமையான சித்தியடைந்தவர்களாயும் பரீட்சையைப் பூர்த்தி செய் திருத்தல் வேண்டும் |
| (iv) படையினர்—(களஞ்சியபொறுப் பாளர் நுண்தொழில்) பிரிவு " B " வகுப்பு III | ஷை | விண்ணப்பகாரர்கள் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரணம்)ல் ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்குக் கூடாத முறையில் அல்லது சிரேட்ட தராதரப் பத்திரப்பரீட்சையில் கணக்குப்பதிவியல் பாடத்தில் திறமையான சித்தியடைந்தவர்களாயும் பரீட்சையை பூர்த்திசெய்திருத் தல் வேண்டும் |
| (v) படையினர்—(வரைஞர்கள்) பிரிவு " A " வகுப்பு III | | விண்ணப்பகாரர்கள் பொதுத் தராதரப்பத்திர பரீட்சை (சாதாரணம்)ல் ஆறு பாடங்களில் இருதடவைகளுக்குக் கூடாத முறையில் அல்லது சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் தூய கணிதம் உட்பட சித்தியடைந்தவர்களாயும் இலங்கை நுண்தொழில்கல்லூரியில் அல்லது கார்டி நுண்தொழில் பயிற்சி கழகத்தில் முதல்வருட (முழுநேர) பயிற்சி வரைதல பாடத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் |
| (vi) படையினர்—(கட்டவேலையாளர்) பிரிவு " B " வகுப்பு III | ஷை | எல்லா விண்ணப்பகாரர்களும் 7 ம் வகுப்பு சித்தியடைந்தவர்களாயும் அத்துடன் கீழ் காணப்படும் ஏதாவது ஓர் பாடத்திலும் பயிற்சியடைந் தவர்களாயும் இருத்தல் வேண்டும் :—<br>(அ) தொழில் பகுதி இலாகாவால் அல்லது இலங்கை நுண்தொழில் கல்லூரியில் நடாத்தப்பட்ட நுண்தொழில் பயிற்சி அல்லது ஒரு கலைஞனிடம் சித்திகரமாக/முடித்த ஏதாவது ஒரு பயிற்சிநெறிப்பத் திரம்<br>அல்லது<br>(ஆ) பிரசித்திபெற்ற பொறியியல் ஸ்தாபனம் ஒன்றில் குறைந்தது மூன்றுவருட காலம் ஒழுங்காக ஊழியம் செய்ததாகக் காட்டும் உறுதிப்பத்திரம்<br>விண்ணப்பகாரர்கள் தாம் எந்த நியமனத்திற்குத் தம் விண்ணப்பங்களை தயார் செய்வது என்று தெளிவாக எழுதுதல் வேண்டும்<br>(vi) இருந்து (x) வரை உள்ள காலிஸ்தானங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பகாரர்கள் ஒவ்வொரு காலி ஸ்தானங்களுக்கும் ஒவ்வொரு விண்ணப்பங்கள் சமர்பிக்க வேண்டும் |
| (vii) படையினர்-(தச்சுவேலையாளர்) பிரிவு " B " வகுப்பு III | ஷை | |
| (viii) படையினர்—(மின்சாரவேலையா ளர்) பிரிவு "A" வகுப்பு III | ஷை | |
| (ix) படையினர்—(குழாய் ஒட்டு வோர்) பிரிவு " B " வகுப்பு III | ஷை | |
| (x) படையினர்—(ஒட்டுவோர்) பிரிவு " B " வகுப்பு III | ஷை | |
| (xi) படையினர்—(பிரப்பங்கீறு இழைப்போர்) | இலங்கை இராணுவ சேவைப் படை | விண்ணப்பகாரர்கள் வயதில் 18—30 வருடத்திற்குட்பட்டவர்களாயும், சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் 5 ம் வகுப்பு சித்தியடைந்தவராயும், பிரப்பங்கீறு இழைத்தல் சம்பந்தமாக குறைந்தபட்சம் மூன்று வருடகால அனுபவம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். |

(ஆ) விண்ணப்பகாரர்களின் தகுதியை பரிசோதிக்குமுகமாக தேர்வுக்கு முன் அவர்கள் ஒரு தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) 1 ம் பந்தி (அ) பிரிவில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளை இல்லாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

2. **பொது நிபந்தனைகள்.**—இராணுவத்தில் நேரடியான போர்வீரர்களாகச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு முதலாம் பந்தி " அ " பிரிவில் கேட்கப்பட்டுள்ள விசேட தராதரங்களையும் மேலதிகமாய் பின்வரும் பொது நிபந்தனைகளையும் விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்தல் வேண்டும் :—

**ஒரு விண்ணப்பதாரி :—**

(அ) இலங்கைப் பிரஜையாய் இருத்தல் வேண்டும்,

(ஆ) 1969.8.10 திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்,

(இ) சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் 5 ம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்,

(ஈ) வைத்தியப் பரிசோதனையொன்றில் இராணுவத் தளபதியைத் திருப்தி செய்தவராயும்,

(உ) உயரத்தில் 5 அடி 4 அங்குலத்துக்குக் குறையாதவராயும் இருத்தல் வேண்டும்.

எனினும் படைத்தளபதியின் தீர்மானத்திற்கேற்ப தகுதியுடையவர்கள் எனக்காணும் வேறு தகுதியுடையவர்களை அவர்கள் 40 வயதுக்கு மேற்பட்டவர்களாகவோ அல்லது உயரத்தில் 5 அடி 4 அங்குலத்துக்குக் குறைந்தவர்களாகவோ அல்லது இந் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யாதவர் களாகவோ இருப்பினும் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

3. இக்காலிஸ்தானங்களைப் பூர்த்தி செய்யக் கோரும் இராணுவத்தில் இருந்து திரும்பியவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள், மேற்குறிப்பிட்ட பொது நிபந்தனைகட்கு மேலதிகமாகப் பின்வரும் நிபந்தனைகளை நிரூபிக்க வேண்டும் :—

(அ) இலங்கைப்பாதுகாப்புப் படையுடன் கூடிய பிரித்தானிய சாம்ராச்சிய இராணுவப் படையில் ஒரு வருடத்திற்குக் குறையாத சேவையை யுடையவர்களாயும்,

(ஆ) சேவையில் இருந்து விலகிய போது சேவைத்தரம் குறைந்த பட்சம் " மிக நன்று " என்றுதல் அத்தாட்சிப் படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

4. **சேவைக்காலம்.**—ஒரு போர்வீரர் சாதாரணமாக 5 வருடங்கள் கட்டாய சேவையிலும் 7 வருடங்கள் மேற்படையிலும் சேவைக்காகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இக்கால வரையறை முடிவில் இவர்கள் சேவையில் இருந்து விலக்கப்படலாம். எனினும் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் ஓர் இராணுவ வீரர் தனது சேவையை மேலும் 12 வருடங்கள் வரை சேவை செய்யக்கூடியதாகச் சேர்த்துக் கொள்ளவும் எல்லாமாக 32 வருடம் வரை சேவை செய்யக்கூடியதாகவும் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படலாம்.

5. **சம்பளமும் சகாயப் பணமும்.**—இராணுவத்தின் நிரந்தரப் படையில் சேவையில் இருக்கும் ஏனைய தரத்தினரைப் போன்று 1961 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28 ம் திகதிய 12,395 ம் இலக்க இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ம் ஆண்டின் இராணுவ வேதனக்கட்டளைச் சட்டத்தின் முதலாம் பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி சம்பளமும் சகாயப்பணமும் பெறுவதற்கு இவர்கள் உரிமையுடையவர்களாகக் கருதப்படுவர்.

(அ) **தொழில் நுணுக்கமற்ற போர்வீரர்களுக்கான சம்பள விகிதம்.**—1961 ம் ஆண்டின் இராணுவ வேதனக் கட்டளைச் சட்டத்தின்படி தனித்துவ அல்லது படையினர் தரத்தில் இருந்து வரண்ட் உத்தியோகத்தர் I ம் தரம் வரையிலுள்ள சமமான தரத்தினையுடைய தொழில் நுணுக்கமற்ற போர் வீரர்களுக்கான மாதாந்தச் சம்பள விகிதம் கீழ் வருமாறு :—

| தரம் | மாதாந்தச் சம்பள விகிதம் ரூ. ச. |
|---|---|
| படையினர் அல்லது சமமான | 70 0 |
| லான்ஸ் கோப்ரல் அல்லது சமமான | 85 0 |
| கோப்ரல் அல்லது சமமான | 115 0 |
| ஸார்ஜன்ட் | 180 0 |
| ஸ்டாப் ஸார்ஜன்ட் | 202 0 |
| வரன்ட் உத்தியோகத்தர் II ம் வகுப்பு | 220 0 |
| றெஜிமென்டல் குவாட்டமாஸ்டர் ஸார்ஜன்ட் | 235 0 |
| வரன்ட் உத்தியோகத்தர் I ம் வகுப்பு | 250 0 |

(ஆ) **தொழில் நுணுக்கப் போர் வீரர்களுக்கான சம்பள விகிதம்.**—தொழில் நுணுக்கமுள்ளவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கோப்ரல் தரத்தில் அல்லது அதற்குச் சமமான அல்லது குறைந்த தரத்தில் உள்ள போர்வீரர்களுக்கு, அவரவர் தொழில் குழுநிலைக்கு ஏற்பவும், தரத்தின் படியும் பொருந்தும் வகையிலான வருடாந்தச் சம்பள விகிதம் பின்வருமாறு :—

| தரம் | " X " தொழிற்றுறைக்குழு | | | " A " தொழிற்றுறைக்குழு | | | " B " தொழிற்றுறைக்குழு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வகுப்பு 1 ரூபா | வகுப்பு 2 ரூபா | வகுப்பு 3 ரூபா | வகுப்பு 1 ரூபா | வகுப்பு 2 ரூபா | வகுப்பு 3 ரூபா | வகுப்பு 1 ரூபா | வகுப்பு 2 ரூபா | வகுப்பு 3 ரூபா |
| படையினர் அல்லது சமமான | 1,470 | 1,170 | 1,020 | 1,350 | 1,110 | 960 | 1,260 | 1,050 | 930 |
| லான்ஸ் கோப்ரல் அல்லது சமமான | 1,620 | 1,320 | 1,170 | 1,500 | 1,260 | 1,110 | 1,410 | 1,200 | 1,050 |
| கோப்ரல் அல்லது சமமான | 1,980 | 1,680 | 1,530 | 1,860 | 1,620 | 1,470 | 1,770 | 1,560 | 1,410 |

ஸார்ஜன்ட் தரத்தில் உள்ள அல்லது அதற்குச் சமமான அல்லது உயர் தரத்தில் உள்ள தொழில் நுணுக்கமுள்ளவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட போர்வீரர்கட்கு அவரவர்தராதரத்திற்குப் பொருந்தும் வகையிலான வருடாந்த சம்பள விகிதம் வருமாறு :—

| தரம் | உயர்தர தொழில் நுணுக்கம் உடையோர் — பிரிவு " X " வகுப்பு I ரூபா | உயர்தர தொழில் நுணுக்கம் உடையோர் — பிரிவு " A " வகுப்பு I ரூபா | ஏனைய தொழில் நுணுக்கம் உடையோர் — பிரிவு " B " வகுப்பு I ரூபா |
|---|---|---|---|
| ஸார்ஜன் அல்லது சமமான | 2,520 | 2,430 | 2,280 |
| ஸ்டாப் ஸார்ஜன்ட் அல்லது சமமான | 2,880 | 2,790 | 2,550 |
| வரன்ட் உத்தியோகத்தர் வகுப்பு II | 3,180 | 3,000 | 2,760 |
| றெஜிமென்டல் குவாட்டர் மாஸ்டர் ஸார்ஜன்ட் | 3,360 | 3,180 | 2,940 |
| வரன்ட் உத்தியோகத்தர் வகுப்பு I | 3,540 | 3,360 | 3,120 |

(இ) **ஜீவிய சகாயப் பணமும் விசேட சகாயப் பணமும்.**—பின்வரும் பிரிவுகளைச் சார்ந்த போர்வீரர்கட்கு அரசாங்க விதிதப்படி ஜீவிய சகாயப் பணமும் விசேச சகாயப் பணமும் வழங்கப்படும்.

(1) இராணுவச் செலவில் உணவு கொடுக்கப்படாத விவாகமான போர்வீரர்.

(2) பாசறைக்கு வெளியே வசித்தற்கு அனுமதி பெற்ற விவாகமாகாத போர்வீரர்.

(3) பாசறையில் உணவு கொள்ளாது விடுதலையிலிருக்கும் விவாகமாகாத போர்வீரர்.

இராணுவச் செலவில் உணவு கொடுக்கப்படும் விவாகமான அல்லது விவாகமாகாத போர் வீரர்கள் :—

(1) அரசாங்க விதிதப்படியுள்ள ஜீ. ச. பணத்தினதும் விசேட ச. பணத்தினதும் கூட்டு மொத்தத் தொகைக்கும்.

(2) தகுதிக்கேற்ப இராணுவத் தளபதியால் உணவுச் செலவாக நிர்ணயிக்கப்படும் மொத்தத் தொகைக்குமுள்ள வித்தியாசத்திற்கே உரித்துடையவராவர்.

(ஈ) **வீட்டு வாடகை.**—இராணுவ அல்லது அரசாங்க வீடுகள் வழங்கப்படாத விவாகமான போர்வீரர்கட்கும் அரசாங்க ஊழியருக்கு அரசாங்கத் தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப, தனது நியமனத்திற்குத் தக்கதாக விசேட வீட்டு வசதிகள் அல்லது பாசறையில் தங்கும் வசதியளிக்கப் படாத விவாகமாகாத போர்வீரர்கட்கும் வீட்டுவாடகை வழங்கப்படும். இராணுவ அல்லது அரசாங்க வீடுகளில் வசிக்கும் போர் வீரர்கள் வீட்டு வாடகைக்கு உரித்துடையராகார்.

(உ) **சலவைச் செலவு.**—(1) பாசறையில் தங்கியிருக்கும் ஒரு போர்வீரர் தனது இராணுவ உடைகளை இராணுவச் செலவில் சலவை செய்து கொள்ளுவதற்கு அருகதையுடையவராவர்.

(2) வெளியே வசிக்கும் ஒரு போர்வீரர் இராணுவத் தளபதியின் நிர்ணயத்திற்கேற்ப தனது இராணுவ உடைகளைச் சலவை செய்வதற்காக ஒரு சலவைச் செலவுப்படியைப் பெற அருகதையுடையவராவர்.

(ஊ) **சேவைக்கால சம்பள உயர்வு.**— இராணுவத்தில் திருப்திகரமாகச் சேவை செய்யும் ஒவ்வொரு ஐந்து வருடகாலத்திற்கும் மாதாந்தம் ரூபா 4.50 வீதமான சம்பள உயர்வு நிரந்தரப் போர் வீரர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

(எ) **தகுதிச்சம்பள உயர்வு.**—கோப்ரல் முதல் வாரண்ட் உத்தியோகத்தர் II வரையுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நான்கு வருடகால சேவைக்கும் மாதாந்தம் ரூபா 7.50 விகிதத்திலான தகுதிச் சம்பள உயர்வுக்கும், வரண்ட் உத்தியோகத்தர் I தரத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு நான்கு வருடகால சேவைக்கு மாதாந்தம் ரூபா 15 விகிதத்திலான சம்பள உயர்வுக்கும் உரித்துடையவராவர். கோப்ரல் அல்லது சமமான தரத்தையுடைய போர்வீரர் நான்கு தகுதிச்சம்பள உயர்வுக்கு மாத்திரமே உரித்துடையவராவர்.

(ஏ) **கைம்பெண் அநாதைப்பிள்ளைகளின் உபகாரச் சம்பள நிதி.**—இராணுவவீரர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொருவரும் தன் சம்பளத்தின் 4% கழித்துத் தனது உதவு தொகையாக படைக்கலந்தாங்கு சேவைகளின் கைம்பெண் அநாதைப்பிள்ளைகளின் உபகாரச் சம்பள நிதிக்குச் சேர்ப்பதற்கு எழுத்துமூலம் தன் சம்மதத்தைக் கொடுத்தல் வேண்டும்.

6. இவ்வறிவித்தலின் 1 ம் பந்தி (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நேரடியான சேவைக்கு உரிய காலிஸ்தானங்களுக்கான விண்ணப்பங்கள் யாவும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தனவாக இருத்தல் வேண்டும்.

(அ) இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போன்றதாகவும், விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் விண்ணப்பதாரிகளின் சொந்தக் கை எழுத்தில் தயாரிக்கப்பட்டு நிரப்பப்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் யாவும், இராணுவ ஆள்திரட்டும் அதிகாரி, இராணுவ தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்று விலாசம் இடப்பட்டனவாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்திலும் அவை அனுப்பப்படும் உறையிலும் " நிரந்தரப் படையில் சேர்வதற்கான விண்ணப்பம் " என்று குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 1969 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 10 ம் திகதி பி. ப. 4.30 மணிக்கு முன் இராணுவத் தலைமைக் காரியாலயத்தில் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் பதவி, தரம், (கூறு, நியமனம்) ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஈ) பின்வரும் சான்றுப்பத்திரங்களின் பிரதிகள் மாத்திரமே விண்ணப்பப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.—

(1) பிறப்புச் சாட்சிப் பத்திரம் அல்லது, (அல்லது பிறப்பு பதிவு செய்யப்படாத விண்ணப்பதாரிகளைப் பொறுத்த வரை) பிரதம பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட விசேட வயதுச் சான்றுப் பத்திரம், ஞானஸ்நானப்பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலை பிரமாணங்கட்கமையக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றுப் பத்திரம் அல்லது ஜாதகம் அல்லது இதுபோன்ற வேறும் பிறப்புக் குறிப்புகள் எதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(2) பெற்றுக்கொண்ட ஆகக் கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(3) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்டனவும் விண்ணப்பதாரியின் கல்வித்தராதரம், நடத்தை, விண்ணப்பிக்கும் பதவிக்கான தகுதி என்பன பற்றிக் குறிப்பிடும் மூன்று நற்சான்றுப் பத்திரங்கள். ஒரு விண்ணப்பதாரி ஏற்கனவே தொழில் செய்பவரானால் இதில் ஒன்று அவரது தற்போதைய மேலதிகாரியால் கொடுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(1) விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மாத்திரமே இச்சான்றுப் பத்திரங்களின் (உண்மைப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

(2) விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்பியதன் மூலம் தவறி அல்லது காணாமல் போகும் எவ்விதமான, தஸ்தாவேஜுகளின் உண்மைப் பிரதிகள் சம்பந்தமாக இராணுவத் தலைமை நிலையம் எந்த வகையான பொறுப்பும் ஏற்றுக் கொள்ள மாட்டாது.

(உ) தபாலில் அனுப்பியதால் தவறும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாகச் செய்யப்படும் எவ்விதமான முறையீடுகளும் கவனிக்கப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பத்துடன் தமது சொந்த முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்படாத தபால் உறை ஒன்றை அனுப்பும் விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். அன்றேல் அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

(எ) ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவருக்கூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.

(ஏ) அரசாங்கத் திணைக்களத் தலைவர்கட்கூடாக அனுப்பப்பட்ட, ஆனால் உரிய காலத்திற்குப் பின் இக்காரியாலயத்திற்குக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வரையில், தாமதத்திற்குப் போதிய காரணத்தைக் காட்டி, விண்ணப்பங்கள் உரிய காலத்தில் கிடைத்ததென்றும் அது ஏற்றுக் கொள்ளப்படலாம் என்றும் திணைக்களத் தலைவரால் சிபாரிசு செய்யப் பட்டிராத விடத்து இத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(ஐ) இராணுவ தெரிவுக் குழுவால் தகுதியுள்ளவரெனக் கருதப்படும் விண்ணப்பதாரிகள் தமது சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்கப் படுவர். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய இடம், நேரம், காலம் என்பன பற்றி இவர்கட்குத் தனித்தனி அறிவிக்கப்படும்.

(ஒ) நேர்முகப் பரீட்சைக்குப் பின் சேர்த்துக் கொள்ளுவதற்குத் தகுதியுடையவர் எனத் தெரிவுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள், ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகளில் வைத்தியப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அழைக்கப் படுவர்.

(ஓ) தேவையான பரிசோதனைகளும், நேர்முகப் பரீட்சையும் நடைபெற்ற பின் இராணுவத் தெரிவுக் குழுவால் இராணுவ நிரந்தரப் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள், இராணுவ பயிற்சி நிலையத்தில் அல்லது குறிப்பிட்ட வேறோரிடத்தில் பயிற்சிக்காக அனுப்பப்படுவர்.

(ஔ) தமது பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் சம்மதத்தை எழுத்து மூலம் சமர்ப்பித்தால் அன்றி 21 வயதுக்குக் குறைந்த எவரும் இராணுவ நிரந்தரப் படையில் சேர்த்துக் கொள்ளப் படமாட்டார்கள்.

(க) தெரிவு செய்யப்பட்டு இராணுவ நிரந்தரப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகள் அனைவரும் 1956 ம் வருட 33 ம் இலக்க அரசகரும மொழிச் செயல் முறைக் கட்டளைச் சட்டத்தை அமுல் நடத்தும் வகையில் உள்ள எல்லாக் கட்டளைச் சட்டங்கட்கும் இது சம்பந்தமாக இனிமேல் நடைமுறைக்கு வரும் கட்டளைச் சட்டங்கட்கும் அடங்கி நடக்க வேண்டும் எனக் கட்டாயப் படுத்தப் படுகின்றனர்.

(கா) எவரேனும் ஒருவர் ஒரு விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பினால் அவருக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரம் கொடுப்பதன் மூலம் அவரைச் சிபாரிசு செய்யலாம். அன்றி விண்ணப்பதாரி தெரிவு பெறுவான் வேண்டி வேறெந்த வகையிலேனும் அவருக்காகப் பிரசாரம் செய்தல் அல்லது சலுகை பெற முயற்சித்தல் போன்ற வேறும் எத்தனங்கள், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரியின் விண்ணப்பத்தை நிராகரித்தற்கு ஏற்ற ஏதுக்களாகும்.

(கி) விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல்கள் எவையேனும் பிழையானவை என்று விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட முன்பு கண்டு பிடிக்கப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின் எப்போதாவது கண்டுபிடிக்கப் பட்டால், சம்பந்தப்பட்டவர் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இராணுவத்தில் இருந்தும் விலக்கப்படுவர்.

இராணுவத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு,
1969 ம் ஆடு ஜூலை மீ 18 ந் உ.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
இராணுவத் தளபதிக்காக.

## இலங்கை இராணுவ நிரந்தரப் படையில் சேருவதற்கான மாதிரிவிண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) : ————.
2. தபால் விலாசம் : ————.
3. பிறந்த திகதி : ————.
   வயது : ————.
4. சித்தியடைந்துள்ள கூடுதலான கல்வித் தராதரம் : ————.
   (பாடங்களும் திகதிகளும் தருக)
5. சேர விரும்பும் பிரிவு : ————.
   (1 ம் பந்தியின் பிரமாணம், நியமனம், கூறு ஆகியவை குறிப்பிடப்படல் வேண்டும்)
6. 1 ம் பந்தியின் பிரகாரம் (அ) பிரிவின் கீழ் நீர் கூடுதலான தகுதி உடையவரா ? அப்படியாயின் பூரண விபரம் தருக : ————.
7. பாடசாலை அல்லது கல்லூரியை விட்டு விலகிய பின் செய்த தொழில் : ————.
8. உயரம் : ————. அடி : ———— அங்குலம்: ————.
9. தேசிய இனம் : ————.
10. அருகாமையில் உள்ள பொலீஸ் நிலையம் : ————
11. இதற்கு முதல் செய்த தொழிலில் அனுபவம் இருந்தால், அதன் பிரிவும் தகுதிகளும் : ————.
12. இராணுவ (யுத்தகால சேவையுட்பட) கடற் படை, ஆகாயப்படை, தொண்டர் படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருந்தால், பிரிவு, தகுதிகள் ஆகியவற்றுடன் பூரண விபரம் தருக : ————.
13. இராணுவத்தில் இருந்து விலகிய பொழுது உமது நடத்தை : ————.
14. வேறு தகுதிகள் இருப்பின் (விளையாட்டு சம்பந்தப்பட்டவையுட்பட) : ————.
15. 6 ம் பந்தியில் (ஈ) 3 ம் பிரிவின் பிரகாரம் நற்சான்றுப்பத்திரம் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் தகுதிகளும் : ————.
    (1) ————.
    (2) ————.
    (3) ————.
16. விண்ணப்பக்காரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டிய உறுதி : ————.

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னுல் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரை சரியானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————

7-1143—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

## அரசாங்க தகவல் பகுதி

### திரைப்படம் கழுவிப் பதிப்பிக்கும் உதவியாளர் பதவி
### அரசாங்கத் திரைப்படப் பிரிவு

அரசாங்கத் தகவற் பகுதியைச் சேர்ந்த அரசாங்கத் திரைப்படப் பிரிவில் திரைப்படம் கழுவிப் பதிப்பிக்கும் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் நிரப்பி அனுப்பப்படும் விண்ணப்பங்கள், தகவல் அதிபதி, இல. 7, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 1 என விலாசமிடப்பட்டு, 1969 ஆகஸ்ட் 10 ஆந் திகதியன்று அனுப்பப்படுதல் வேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பள விகிதம் ரூபா 2,820—120/180—ரூபா 5,340.

3. **நியமன நியதிகள்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றிச் சம்பள உரித்துடையதுமாகும். நியமனம், முதற்கண் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் அடிப்படையிலானதாகும்.

4. **தேவையான கல்வித் தகைமைகளும் இதர தகைமைகளும்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை பெற்றவர் எனபதற்குத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 1969 ஆகஸ்ட் 10 ஆந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாத வராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) நல்லொழுக்கமுடையவராயிருத்தல் வேண்டும் ; அத்தோடு உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும் ;

(இ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதனை ஒத்த பரீட்சையில் அல்லது அதிலும் உயர்ந்த பரீட்சையில் சித்தி எய்தியவராயிருத்தல் வேண்டும் ;

(ஈ) 35 மிலிமீட்டர் திரைப்படங்களைக் கழுவிப் பதிப்பிப்பதில் குறைந்த பட்சம் தொடர்ச்சியாக, இரண்டு வருட கால அனுபவம் பெற்றிருப்பதோடு திரைப்படப் பிடிப்பிலும் (கறுப்பு, வெள்ளை, வர்ணம்) அறிவிருத்தல் வேண்டும் ; திரைப்படங்களைக் கழுவுதற்கு வேண்டிய இரசாயனக் கலவைகளைத் தயாரிக்கும் ஆற்றலும் 35 மிலிமீட்டர் கழுவும் இயந்திரங்களையும் பதிப்பிக்கும் இயந்திரங்களையும் இயக்கும் ஆற்றலும் அபேட்சகர்களுக்கு இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பெற்ற அதியுயர்ந்த கல்வித் தராதரப் பரீட்சைப் பத்திரங்கள்.

(இ) அபேட்சகரின் தராதரங்கள், குணம், ஆற்றல், பதவிக்குரிய தகுதி ஆகியன பற்றி அண்மையில் தரப்பட்ட மூன்று சான்றுக் கடிதங்கள். (இந்த உப பிரிவின் கீழ் அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்கள் சான்றிதழ்கள் தரவேண்டியதில்லை).

**முக்கிய குறிப்பு.**—சான்றிதழ்கள், கடிதங்கள் ஆகியவற்றின் பிரதிகள் அபேட்சகருக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டா.

6. விண்ணப்பங்களும் சம்பந்தப்பட்ட இதர எந்தக் கடிதங்களும் தகவல் அதிபதி, தகவல் பகுதி, இல. 7, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 1, என்ற விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும். எக்காரணத்தையிட்டும் இப்பகுதியிலுள்ள எந்த உத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படக் கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

எம். கே. திசைநாயகம்,
பதில் தகவல் அதிபதி.

தகவற் பகுதி, கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர் :————.
   (தெளிவான எழுத்துக்களில்)
2. தபால் முகவரி :————.

3. (அ) தேசிய இனமும் எவ்வாறு பெறப்பட்டதென்பதும் :————.

(ஆ) பிறந்த இடம் :—

(1) விண்ணப்பதாரரின் :————.

(2) விண்ணப்பதாரரின் தகப்பன் :————.

(3) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப்பாட்டன் :————.

(4) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

(முக்கிய குறிப்பு.—விண்ணப்பதாரரும் அவரது தகப்பனும் இலங்கையில் பிறந்திருப்பின் மட்டுமே (1) ம், (2) ம் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரரோ அவரது தகப்பனோ இலங்கைக்கு வெளியே பிறந்திருப்பின் (1), (2), (3), (4) ஆகிய பந்திகள் அனைத்தும் நிரப்பப்பட வேண்டும்.

4. பிறந்த திகதி :————.

5. விவாகமானவரா அல்லது பிரமச்சாரியா ? :————.

6. கல்வித் தகைமைகள் :————.

7. சிங்களத்தில்/தமிழில் கல்வித் தகைமைகள் :————.

8. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்டு விலகியதிலிருந்து பார்த்த தொழில்கள் :————.

9. தற்போதைய தொழில் :————.

10. திரைப்படங்களைக் கழுவிப் பதிப்பித்தில் பெற்றுள்ள அனுபவம்:————.

11. உமது விண்ணப்பத்துக்குச் சார்பாக விசேட தகைமைகள் எவையும் இருப்பின் அவை பற்றிய விபரங்கள் :————.

12. அபேட்சகரின் ஆற்றலையும் குணத்தையும் பற்றி அறியத்தரக்கூடிய மூன்று பிரமுகர்களின் பெயர்களும் விலாசங்களும் :————.

13. நற்சாட்சிப் பத்திரங்கள் (அண்மையில் பெறப்பட்ட 3 நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை இணைத்தனுப்பவும்) :————.

————

விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி : 1969..................

7–1073—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் புற விரிவுரையாளர் பதவிகள்

கொழும்பு, இலங்கைத் தொழிற் நுட்பக் கல்லூரியிலுள்ள புற விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் பயிற்சி நெறிகளுக்கும் பாடங்களுக்கும் புற விரிவுரையாளர் தேவைப்படுகின்றனர் :—

#### கணக்கியல் பிரிவு

| பயிற்சி நெறி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|
| கணக்கியல் தகுதித் தேர்வு .. .. .. .. | பின்னேரம் .. | (1) பொது வணிக அறிவு |
| | | (2) வணிகச் சட்டம் |
| | | (3) கணக்குமுறை |
| | | (4) கணக்குப் பரிசோதனை |
| | | (5) செலவினக் கணக்குமுறைகள் |
| | | (6) உயர்தரக் கணக்குமுறை |
| | | (7) தத்துவகாரர் முதலியோர் பற்றிய சட்டம் |
| | | (8) பங்குடைமை, கம்பனிச் சட்டம் |
| | | (9) ஆளுகைக் கணக்குமுறை |
| | | (10) வரி விதிப்பு |
| | | (11) பொது நிதி அறிவு |
| செயலாளர் கடமை .. .. .. .. | பகல் .. | (1) ஆங்கிலம் |
| செயலாளர் கடமை .. .. .. .. | பின்னேரம் .. | (1) ஆங்கிலம் |
| | | (2) கணக்குமுறை |
| | | (3) சட்டத்தின் பொதுப் பிரமாணங்கள் |
| | | (4) பொருளியல் |
| | | (5) வியாபாரச் சட்டம் |
| | | (6) செயலாண்மை, நிருவாகப் பயிற்சி |
| | | (7) கம்பனிச் செயலாண்மைப் பயிற்சி |
| | | (8) பொது நிர்வாகம் |
| வங்கித் தொழில் .. .. .. .. | பின்னேரம் .. | (1) கணக்குப் பதிவியல் |
| | | (2) பொருளியலும் புவியியலும் |
| | | (3) சட்டப் பிரமாணங்கள் |
| | | (4) ஆங்கிலம் |
| | | (5) கணக்குமுறை |
| | | (6) நாணயக் கொள்கை |
| | | (7) வங்கித்தொழில் பற்றிய சட்டம் |
| | | (8) அந்நியச் செலாவணி, வியாபாரத் தொடிணைந்த நிதியியல் |
| | | (9) வங்கித் தொழில் பயிற்சி |
| இடப்பெயர்ச்சி .. .. .. .. | பின்னேரம் .. | (1) இடப்பெயர்ச்சியின் மூலகங்கள் |
| | | (2) இக்கால இடப்பெயர்ச்சியின் பரிநாமம் |
| | | (3) ஆங்கிலம் |
| | | (4) பொருளியல் |
| | | (5) சட்டப் பிரமாணங்கள் |
| | | (6) புவியியல் |
| செலவினக் கணக்கியல் .. .. .. .. | பின்னேரம் .. | (1) தொழில்முறை நிர்வாகம் |
| | | (2) கணக்குப் பதிவியல் |
| | | (3) புள்ளிவிபர இயல் |
| | | (4) பொருளியல் |
| | | (5) செலவினக் கணக்குமுறை (தொழில்) |
| | | (6) செலவினக் கணக்குமுறை (பதார்த்தங்கள்) |
| | | (7) செலவினக் கணக்குமுறை (பொதுத் தலைப்பு) |
| | | (8) பணக் கணக்குமுறை |
| | | (9) தொழிலியல், வணிகச் சட்டம் |
| | | (10) அலுவலக ஆளுகை |

### வணிகப் பிரிவு (ஆங்கிலம்)

| பயிற்சி நெறி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|
| வணிகத் தகுதித் தேர்வு .. .. .. .. | பகல் .. | (1) சட்டப் பொதுப்பிரமாணங்கள்<br>(2) அரசாங்கம்<br>(3) பொருளியல் பிரமாணங்கள்<br>(4) பிரயோகப் பொருளியல்<br>(5) செலவினக் கணக்குமுறை<br>(6) அரசியல் கொள்கை<br>(7) பொது நிதியியல்<br>(8) கணக்குமுறை<br>(9) கணக்குப் பரிசோதனை<br>(10) வரி விதிப்பு<br>(11) வணிகச் சட்டம் |
| மதிப்பீட்டுத் தகுதித் தேரவு .. .. .. .. | பகல்/பின்னேரம் .. | (1) மதிப்பீடு<br>(2) நிலம் பற்றிய சட்டம்<br>(3) உள்ளூராட்சி நிதியியல்<br>(4) உள்ளூராட்சிச் சட்டம்<br>(5) விவசாயம்<br>(6) நகரமைப்புத் திட்டம்<br>(7) கட்டட அமைப்பு<br>(8) அளத்தல் |
| கணக்குப் பதிவியலாளருக்கான வணிக தராதரப் பத்திரம் .. .. | பகல் .. | (1) வணிகப் புவியியல்<br>(2) ஆங்கிலம்<br>(3) வணிக எண் கணிதம் |
| கணக்குப் பதிவியலாளருக்கான வணிக தராதரப் பத்திரம் .. .. | பின்னேரம் .. | (1) கணக்குப் பதிவியல்<br>(2) வணிக மூலகங்கள்<br>(3) ஆங்கிலம்<br>(4) வணிகப் புவியியல்<br>(5) வணிகமும் நிதியும் |
| உயர் சுருக்கெழுத்தியல் .. .. .. .. | பின்னேரம் .. | (1) சுருக்கெழுத்து<br>(2) ஆங்கிலம் |
| விற்பனையாண்மையும் விற்பனை ஆளுகையும் .. .. .. | போயா முன்தினம் .. | (1) விற்பனையாண்மையும் விற்பனை ஆளுகையும் |

### வணிகப் பிரிவு (சிங்களம்)

| பயிற்சி நெறி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|
| வணிகத் தகுதித் தேர்வு .. .. .. .. | பகல் .. | (1) பொருளியல் மூலகங்கள்<br>(2) பொருளியற் புவியியல்<br>(3) கணக்குமுறை<br>(4) பொருளியல் வரலாறு<br>(5) செலவினம் கணக்குமுறை<br>(6) வரி விதிப்பு<br>(7) முயற்சி நிர்வாகம்<br>(8) பொது நிதியியல்<br>(9) வணிகச் சட்டம் |
| கணக்குப் பதிவியலாளருக்கும் சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளருக்குமான வணிக தராதரப் பத்திம் | பகல் .. | (1) சுருக்கெழுத்து<br>(2) சிங்கள மொழி<br>(3) வணிக எண்கணிதம் |
| கணக்குப் பதிவியலாளருக்கான வணிகத் தராதரப் பத்திரம் .. .. | பின்னேரம் .. | (1) கணக்குப் பதிவியல்<br>(2) கணக்குமுறை<br>(3) வணிகப் புவியியல்<br>(4) வணிக எண்கணிதம்<br>(5) சுருக்கெழுத்து<br>(6) வணிகமும் நிதியும் |
| சுருக்கெழுத்தாளர் .. .. .. .. | பகல்/பின்னேரம் .. | (1) சிங்கள மொழி |
| உயர் சுருக்கெழுத்தியல் .. .. .. .. | பின்னேரம் .. | (1) சுருக்கெழுத்து<br>(2) சிங்கள மொழி<br>(3) தட்டெழுத்து |
| விற்பனையாண்மையும் விற்பனை ஆளுகையும் .. .. .. | போயா முன்தினம் .. | (1) விற்பனையாண்மையும் விற்பனை ஆளுகையும் |

### பயில் தொழிற் பிரிவு

| பயிற்சி நெறி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|
| பொறிச்சாலைப் பயிற்சியில் மூன்று வருடப் பயிற்சிநெறி .. .. | பின்னேரம் .. | (1) பொறிச்சாலைப் பயிற்சி(செய்முறை)<br>(2) வினைச்சாலைத் தொழில் நுட்பமும் கணிப்பும்<br>(3) தொழில்நுட்ப வரைவு |
| பொருத்தலில் மூன்று வருட பயிற்சிநெறி .. .. .. | பின்னேரம் .. | (1) பொருத்தல் செய்கைமுறைகள்<br>(2) கொள்கையும் கணிப்பும்<br>(3) தொழில் நுட்ப வரைவு |
| எழுத்துக் கோர்த்தலில் மூன்று வருட பயிற்சி நெறி .. .. | பின்னேரம் .. | (1) கொள்கையும் கணிப்பும்<br>(2) செய்முறைகள்<br>(3) ஆங்கில மொழி<br>(4) சிங்கள மொழி |

| பயிற்சிநெறி | பகல்/பின்னேரம் | பாடங்கள் |
|---|---|---|
| புத்தகங் கட்டலில் மூன்று வருட பயிற்சிநெறி .. .. .. | பின்னேரம் | .. (1) கொள்கையும் கணிப்பும்<br>(2) செய்முறைகள்<br>(3) ஆங்கில மொழி<br>(4) சிங்கள மொழி |
| எழுத்து அழுத்த பொறி அச்சிடலில் மூன்று வருட பயிற்சி நெறி .. | பின்னேரம் | .. (1) கொள்கையும் கணிப்பும்<br>(2) செய்முறைகள்<br>(3) ஆங்கில மொழி<br>(4) சிங்கள மொழி |
| வானொலி பேணற் சேவையிலும் இலத்திரனியற் சேவையிலும் ஈராண்டுப் பயிற்சி .. | பகல் | .. (1) வானொலிக் கொள்கை<br>(2) வானொலி செய்முறைகள்<br>(3) இலத்திரனியற் கொள்கை |
| மின்கம்பி அமைப்பில் ஒரு வருட பயிற்சி நெறி .. .. | பின்னேரம் | .. (1) மின்கம்பி அமைப்பு செய்முறைகள் |
| குழாயமைப்புத் தொழில் ஒரு வருட பயிற்சி நெறி .. .. | பின்னேரம் | .. (1) குழாயமைப்பு |

**நேரம் :**—பகல் நேரப் பயிற்சி நெறிகள் வார நாட்களில் மு. ப. 8.00 மணி தொடக்கம் பி. ப. 5.00 மணி வரையும், பின்னேர பயிற்சி நெறிகள் வார நாட்களில் பி. ப. 5.00 தொடக்கம் பி. ப. 7.15 மணி வரையும், போயா முன்தினங்களில் பி. ப. 1.30 மணி தொடக்கம் பி. ப. 4.30 மணி வரையும் நடைபெறும்.

**கட்டணம் :**—விரிவுரையாளருக்கான கட்டண விகிதங்கள் ஒரு மணித்தியால விரிவுரைக்கு ரூபா 2.50 தொடக்கம் ரூபா 21.00 வரை மாறுபடும் ; தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு கொடுபடக்கூடிய வீதங்கள் அவர்களின் கல்வித் தகைமைகளுக்கும் உயர்தொழிற் றகைமைகளுக்கும் திறைசேரியால் விதிக்கப்பட்டுள்ள பிரகாரம் பயிற்சி நெறியின் மட்டத்துக்கும் அமையும். படிப்பித்தல் அனுபவம் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**நியமன நியதிகள் :**—நியமனம் 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 1970 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் முடிவடையும் ஒரு கல்லூரி ஆண்டுக்கானதாகும். எனினும், காரணங்கள் ஒன்றும் காட்டாது கல்லூரி ஆண்டின்போது எந்நேரத்திலேனும் அவர்களின் சேவை நிறுத்தப் படலாம்.

கல்வி ஆண்டில் படிப்பிக்க வேண்டியதான அவர்களுக்குக் கொடுபடும் பாடத்திட்டங்களை அவர்கள் எங்ஙனம் படிப்பிப்பார்களென விளக்கும் வேலைத்திட்டங்களை பருவம் ஆரம்பிக்குமுன் புற விரிவுரையாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும். கல்லூரியாண்டின்போது அவர்கள் நிகழ்த்தும் விரிவுரைகள் அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு அமைய வேண்டும்.

பருவப் பரீட்சைகளில் வெளியே இருந்து பரீட்சகர்கள் அமர்த்தப்பட்டால் அன்றி, தங்களுடைய வகுப்புக்களிலுள்ள மாணவர்களை பருவ இடைக்கால, பருவப் பரீட்சைகளில் அவர்கள் மேலதிக வேதனமின்றி பரீட்சிக்க வேண்டும்.

**விண்ணப்பங்கள் ஏற்கும் திகதி :**—விண்ணப்பங்கள், கீழ்க்காணும் படிவ முறையில் இரட்டைப் பிரதியில் தயாரிக்கப்பட்டு " அதிபர், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, கொழும்பு 10 " என்ற விலாசத்துக்கு 1969 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 7 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

கொழும்பு வட்டார கல்வி அலுவலகம், கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 12 ந் வ.

கல்வி ஆள்வோன்,
கொழும்புப் பகுதி.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர் :————.
2. வயது :————.
3. சொந்த விலாசம் (தொலைபேசி இலக்கம் யாதேனும் இருப்பின் கொடுக்கவும்) :————.
4. அலுவலக விலாசம் (தொலைபேசி இலக்கம் யாதேனும் இருப்பின் கொடுக்கவும்) :————.
5. தொழில் அல்லது உத்தியோகம் :————.
6. வேறு உத்தியோகம் யாதேனும் இருப்பின் :————.
7. கல்வித் தகைமைகள் (பெற்ற திகதிகளைக் கொடுக்கவும்) :————.
8. உயர்தொழில் தகைமைகள் (பெற்ற திகதிகளைக் கொடுக்கவும்) :————.
9. படிப்பித்தல் அனுபவம், யாதேனும் இருப்பின் :————.
10. செயல்முறை அனுபவம், யாதேனும் இருப்பின் :————.
11. புற விரிவுரையாளராக கடமை புரிய விரும்பும் பயிற்சி நெறியும் பாடங்களும் :—
    பயிற்சி நெறி :————. பாடங்கள் :————.
12. வகுப்புக்களைச் சிங்களத்தில்/ஆங்கிலத்தில் நடாத்த முடியுமா ? :————.
13. வாராந்தம் நிகழ்த்தக்கூடிய விரிவுரைகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை :————.
14. நீர் ஓர் அரசாங்க ஊழியரா ? அங்ஙனமாயின் அலுவலக நேரங்களின் பின் விரிவுரைகள் நிகழ்த்த ஆயத்தமா ? :————.

திகதி :————.

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

7–1055—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

## அக்கரைப்பத்து கிராமசபை பகுதிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிக்கான பதவி

புத்தளம் மாவட்டத்தில் கல்பிட்டி காரியாதிகாரியின் பிரிவில் அக்கரைப்பத்து கிராமசபை பகுதிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்கப் படுகின்றன. கீழ் உள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப் பட்ட விண்ணப்பங்கள் 10.8.69 ல் அல்லது அதற்கு முன் னர் எனக்குத் கிடைத்தல் வேண்டும்.

ஆட்சியெல்லையின் பகுதி

கிராம சேவகர் பிரிவுகள்

1. கட்டைக்காடு (597). 4. விருதோடை (601)

2. கொத்தான்தீவு (598). 5. தேத்தாபளை (603)

3. கடையாமோட்டை (599). 6. நாவக்காடு (605)

2. இப்பதவிக்கு குறிக்கப்பட்ட சம்பளம் கொடுபடமாட் டாது. ஒவ்வொரு விசாரணைக்கும் ரூ. 7/50 கொடுக்கப்படும்.

3. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்ப தாரரும் பின்வரும் தகைமைகள் உடையவரென திருப்திகர மாக நிரூபித்தல் வேண்டும் :—

(அ) 10.8.69 ல் வயது 30 க்குக் குறையாதவராகவும் 60 க்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நற்குண முடையவராகவும் உடல் நலம் உள்ளவராக வும் இருத்தல் வேண்டும்.

(இ) இப்பகுதியில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) பின்வருபவற்றில் ஒரு பரீட்சையில் சித்தியடைந்தவ ராக இருத்தல் வேண்டும் :—

(i) 1925 ம் ஆண்டு தொடக்கம் 1944 ம் ஆண்டு வரைக்கும் நடைபெற்ற சுயபாஷைப் பாட சாலை விடுகைத் தராதரப் பத்திரம் அல்லது சிங்களம் அல்லது தமிழை ஒரு பாடமாகக் கொண்ட ஆங்கில பாடசாலை விடுகைத் தரா தரப் பத்திரம் அல்லது சிங்களம்/தமிழ் ஒரு பாடமாகவுள்ள சிங்களம்/தமிழ்/ஆங்கில கனிஷ்ட தராதரப் பத்திரம்.

(ii) இதே போன்ற ஒரு பரீட்சை அல்லது உயர் வான பரீட்சை.

4. அபேட்சகர்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் பத் திரங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம்.

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணத்தை அத்தாட்சிப்படுத் தக்கூடிய இரண்டு சமீபத்திய நற்சாட்சிப் பத்திரங் கள். இவற்றில் ஒன்று கிராம சேவகரால் வழங்கப் பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரரின் நிரந்தர வசிப்பிடம் பற்றிய கிராம சேவகரின் அத்தாட்சிப் பத்திரம்.

5. அரசாங்க ஊழியர்கள், கூட்டுத்தாபனத் தொழிலாளர் கள், உள்ளூராட்சிச் சபைகளின் அங்கத்தவர்கள் ஆகியோர் திடீர் மரண விசாரணை அதிகாரிகளாக நியமனம் பெறத் தகுதியற்றவர்களாவர்.

6. விண்ணப்பம் கிடைத்ததுபற்றி அறிவிக்கப்படமாட் டாது.

எம். டபிள்யூ. எச். குணரத்ன,
அரசாங்க அதிபர், புத்தளம்.

கச்சேரி,
புத்தளம், 10.7.1969.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**திடீர் மரண விசாரணை அதிகாரி பதவி**

1. விண்ணப்பதாரரின் பெயரும் முழு விலாசமும் (பெரிய எழுத்தில்) : ————.

2. நிரந்தர வசிப்பிடமும் வசித்த காலமும் : ————.

3. ———— ல் சரியான வயது : ————. வருடங்கள் : ————. மாதங்கள் : ————. நாட்கள் :————.

பிறந்த திகதியும் பிறப்பிடமும் : ————.

4. விவாகமானவரா விவாகமாகாதவரா ? : ————.

5. கல்வித் தகைமைகள் : ————.

6. தற்போதைய தொழில் : ————.

7. பொருளாதாரத் தட்டுப்பாடு ஏற்பட்டதுண்டா? அவ் வாறுயின் விபரங்கள் தருக : ————.

8. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவுகளும் பெறு மதியும் : ————.

9. விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் ஏதாவது குற்றத்திற் காகத் தண்டிக்கப்பட்டவரா ? ஆமெனில் விபரங்கள் தருக : ————.

10. இப்பதவிக்கான வேறு ஏதாவது விசேட தகைமை களின் விபரங்கள் : ————.

இந்த விண்ணப்பத்தில் என்னுல் கொடுக்கப்பட்ட விபரங் கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதில் கொடுக்கப் பட்ட ஏதாவது விபரங்கள் பிழையானவையாகவோ அல் லது உண்மையற்றவையாகவோ காணப்பட்டால், தெரிவுக்கு முன்னர் இத்தவறு கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவுக் குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்ட ஈடின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

7-945—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

## குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களம்

**மின் முகாரிப் பதவி—தரம் III**

குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்திஞல் III ம் தர மின் முகாரிப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப் படிவத்தில் நிரப்பப்பட்டு, குடிசார் விமானப் போக்குவரத் துப் பணிப்பாளர், த.பெ. 535, லோற்றஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு 1969.8.8 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. சம்பள அளவுத் திட்டம்

ஆண்டுக்கு ரூபா 1,860/- ஆகத் தொடங்கி 6 ஆண்டு ஏற் றங்களாக, ஆண்டுக்கு ரூபா 120/- ஆக அதிகரித்து ரூபா 2,580/- வரை செல்லும்.

3. வயதெல்லை

1969.8.8 திகதியன்று 24 வயதுக்குக் குறையாதவராக வும் 40 வயதுக்கு மேற்படாதவராகவுமிருத்தல் வேண்டும்.

4. அபேட்சகரிடமிருந்து வேண்டப்படும் கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்

(i) சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் கணிதத்திலும், பௌதிகத்திலும் சித்தியெய்தியவராகவிருத்தல் வேண்டும்.

அல்லது

பொதுக் கல்வித் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களிலும் பிற மூன்று பாடங்களிலும் பரீட்சைக்கு இரு தடவைகளுக்கு மேல் தோற்றாமல் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(ii) இலண்டன் சிற்றி அன்ட் கில்ட்ஸ் நிறுவகத்தின் பின்வரும் சான்றிதழ்களை அல்லது அவற்றிற்குச் சமமான மின் அல்லது இயந்திர எந்திரிகள் நிறுவகத்தினால் வழங்கப்படும் பின்வரும் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) மின் எந்திரவியற் பயிற்சி ஏ சி/டிசி தொடக்கப் பயிற்சி.

(ஆ) மின் எந்திரவியற் பயிற்சி ஏ சி/டிசி இடைப் பயிற்சி.

(iii) நன்கு மதிக்கப்பட்ட தொழிற்சாலையில் 175 கிலோ வாற் வரை கொண்டதும் அதை உள்ளடக்கியதுமான மின் வழங்கும் அலகுகளைக் கையாளுதலில் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

5. சேவை நிபந்தனைகள்

பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்குரியதுமாகும். விதவை அநாதை உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு தொகை வழங்க வேண்டும்.

6. விண்ணப்பகாரர்கள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலமல்ல) இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—சமயதிட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(இ) தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்.

(ஈ) அனுபவத்தை நிரூபிப்பதற்கான நற்சான்றிதழ்கள்.

(உ) இரு குணச் சான்றிதழ்கள்.

7. இந்தச் செய்தி மடலில் பகுதி I தொகுதி II ன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றது.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமாக வேறு கடிதத் தொடர்புகளையும் குடிசார் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளருக்கு முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

டபிள்யூ. எல். பி. டி மெல்
குடிசார் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர்.

குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களம்,
த. பெ. 535, லோற்றஸ் வீதி,
கொழும்பு 1, 1969 யூலை 15 ந் திகதி.

### விண்ணப்பப் படிவம்

மின் முகாரிப் பதவி—தரம் III

1. முழுப் பெயர் : ———.
(தடித்த எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி : ———.

3. பிறந்த திகதியும் வயதும் : ———.

4. இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறாயின் —
   1. பரம்பரையாகவா ? : ———.
   2. பதிவு மூலமா ? : ———.

5. சித்தியடைந்த ஆகக் கூடிய பரீட்சை :———.
(சித்தியடைந்த பாடங்களைக் குறிப்பிடவும்)

6. சித்தியெய்திய தொழிநுட்பப் பரீட்சை :———.

7. அனுபவம் : ———.

8. விசேட தகைமைகள், உரிமைக் கோரிக்கைகள் ஏதேனும் இருந்தால் அவற்றைக் குறிப்பிடவும் : ———.

9. தற்போதைய/முன்னைய தொழிலின் விபரத்தைக் குறிப்பிடவும் : ———.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விபரங்களில் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன் காணப்படின் நான் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும், நியமனம் அளிக்கப்பட்ட பின் காணப்படின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ———.

7-995—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

## சமூக சேவைப் பகுதி

### பெண் காவலாளர் பதவி

சமூக சேவைப்பகுதியில், பெண் காவலாளர் பதவிகட்கு விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. பின்னால் தரப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்தில், கண்டிப்பாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்குப் பிந்தாமல், பதிவு செய்யப்பட்ட தபாலில், சமூக சேவை அதிகாரி, காவிமுகப்பு, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 3 என்ற விலாசத்திற்குக் கிடைக்கும்படி அனுப்பிவைத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்கு வகுக்கப்பட்ட சம்பள விகிதம் பின்வருமாறு :—வருடம் ஒன்றிற்கு ரூபா 600—8×30—1×24—ரூபா 864.

3. நியமன நிபந்தனைகள்.—இப்பதவிகள் நிரந்தர அந்தஸ்துள்ளவை. பென்ஷன் வசதிகள் உடையவை. எனினும், ஆரம்பத்தில், இப்பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படுபவர், சகாய நிதிக்குப் பணம் கட்டும் முறையில் நியமிக்கப்படுவர். பென்ஷன் வசதிகளை விரும்பினால், 1957 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கொண்ட இலக்கம் 372 உடைய திறைசேரிச் சுற்றறிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் பெற்றுக் கொள்ளலாம்.

4. இப்பதவிக்கு வேண்டிய தகைமைகள்

ஒவ்வொரு விண்ணப்பதாரரும், பின்வரும் தகைமைகளை அத்தாட்சிப்படுத்த திருப்திகரமான அத்தாட்சி காட்டுதல் வேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி யன்று, 19 வயதிற்குக் குறையாதவராயும், 30 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : (இந்த இலாகாவில் வேலைபார்க்கும் ஒருவருக்கு இந்த வயதுக் கட்டுபாடில்லை).

(இ) எட்டாம் வகுப்புப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். அல்லது இதற்குச் சமமான ஒரு பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

குறிப்பு : (இந்த இலாகாவில் வேலைபார்க்கும் ஒருவர் விஷயத்தில், சமூக சேவை அதிகாரியின் விருப்பப்படி கல்வித்தகைமை தளர்த்தப்படும்).

(ஈ) நற்குணமும் தேக ஆரோக்கியமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(உ) 5′ 4″ உயரமுடையவராயிருத்தல் வேண்டும்.

(ஊ) பிரமச்சாரியாயிருத்தல் வேண்டும்.

5. அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களிடமிருந்துவரும் விண்ணப்பங்கள் குறிக்கப்பட்ட திகதிக்குப் பிந்தாமல் இக் காரியாலயத்திற்கு வந்து சேருதல் வேண்டும். குறிக்கபபட்ட திகதிக்குப் பின்பு வரும் விண்ணப்பங்களில் ஒவ்வொரு விண்ணப்பங்கட்கும் பொறுப்பாயுள்ள காரியாலய அதிகாரி பிந்தியதற்குரிய சரியான காரணத்தைக் குறித்தல் வேண்டும். அல்லது அவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

6. அனுப்பப்படும் விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப்பிரதிகள் தவிர்த்து) இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும். இப்பிரதிகள் திருப்பி அனுப்பப் படமாட்டா :—

(அ) பிறப்புச் சாட்சிப்பத்திரம் (ஞானஸ்நானப்பத்திரம் அல்லது கல்வி கற்றல் சம்பந்தமான பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா).

(ஆ) கல்வித் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்கள்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணத்தையும், குறிக்கப் பட்ட பதவியில் விண்ணப்பதாரரை நியமிப்பதற்குத் தேவையான தகைமைகளையும் எடுத்துக்காட்டும் இரு சான்றிதழ்கள். இவைகள் சமீபத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டனவாயிருததல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் சம்பந்தமாகவும், விண்ணப்பங்கள் பற்றிய வேறு விஷயங்கள் சம்பந்தமாகவும் எழுதப்படும் கடிதங்கள், சமூக சேவை அதிகாரிக்கு மட்டுமே ஒழிய காரியாலயத்திலுள்ள ஒரு உத்தியோகத்தருக்குச் சொந்தமான முறையில் மேல் விலாசமிட்டு அனுப்பப்படக் கூடாது.

8. இந்தக் 'கசெற்' பத்திரிகையின் I ஆம் பாகத்திலடங்கிய II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைக் கவனித்தல் வேண்டும்.

ஆர். எல். திருச்செல்வம்,
சமூக சேவை அதிகாரி.

சமூக சேவைப் பகுதி,
த. பெ. இல. 577,
பாலதக்ஷ மாவத்தை,
காலிமுகப்பு,
கொழும்பு 3.
15. 7. 69.

## மேலே குறிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**சமூக சேவைப் பகுதி**

**பெண் காவலாளர் பதவி**

1. முழுப் பெயர் :————.
(பெரிய எழுத்தில்)
(அ) சொந்தப் பெயர் :————.
(ஆ) ஏனைய பெயர்கள் :————.
2. தபால் விலாசம் :————
3. (அ) 1969.8.10 இல் சரியான வயது :————.
வருடம் :———. மாதம் :———. நாள் :———.
(ஆ) பிறப்புத் திகதி :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப் படல் வேண்டும்)
(இ) உயரம் :—அடி :————. அங்குலம் :————.
4. (அ) சாதி :————
(ஆ) இலங்கைப் பிரசையா எழுதவும்—
(i) பிறப்பால் :————.
(ii) பதிவால் :————.
5. (அ) கல்வித் தகைமைகள் :
(i) சிங்களத்தில் :————.
(ii) தமிழில் :————.
(iii) ஆங்கிலத்தில் :————.
(ஆ) தொழிற் கல்வித் தகைமைகள் :————.
(இ) விசேஷ தகைமைகள் உரிமைகள் ஏதும் இருப்பின் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் மட்டுமே இணைக்கப் படல் வேண்டும்.)
6. பின்வரும் பாஷைகளில் எழுத, வாசிக்க, சம்பாஷிக்கத் தெரியுமா ? எழுதுக :
(i) சிங்களத்தில் :————.
(ii) தமிழில் :————.
(iii) ஆங்கிலத்தில் :————.
7. பாடசாலைவிட்ட திகதியிலிருந்து பார்த்துவந்த உத்தியோகங்களின் விபரங்களைத் தருக :————.
8. உமது நற்குணத்தைப் பற்றியும், வேலைத்திறமையைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு இரு பிரமுகர்களின் பெயர்களையும் விலாசங்களையும் தருக :————.
9. நற்சாட்சிப்பத்திரங்கள் பெற்ற இரு பிரமுகர்களின் பெயர்களையும் விலாசங்களையுந் தருக :————.

இந்த விண்ணப்பத்தில், என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவையென்றும், நிதானமானவையென்றும், இத்தால் அறிவிக்கின்றேன். இங்கே கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதேனும் ஒன்று பிழையானதாயின், நான் தகைமையற்றவராகின்றேன் என்பதை நன்கு அறிவேன். தெரிவு செய்யப்படுவதற்குமுன் தவறினைக் கண்டுபிடித்தால், தகைமை நீக்கம் பெறவேண்டிவரும் என்பதையும் நியமனத்திற்குப்பின் தவறினைக் கண்டுபிடித்தால் நஷ்ட ஈடு இல்லாது விலக்கப்பட வேண்டிவரும் என்பதையும் நான் நன்கு அறிவேன் என்பதை இத்தால் பிரகடனஞ் செய்கிறேன்.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :————.

7-983—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

## உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல் வடிகாலமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதி

உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல், வடிகாலமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் 3 ஆம் தர எந்திரத் தொழில் முகாரியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க் காணப்படும் மாதிரிப்படிவத்தில் நிரப்பப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் 19.8.1969 ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்—ரூபா 1,860 — 120 × 6 — 2,580 வருடாந்தம்.

3. **ஒப்பந்த நியதிகள்.**—பதவி நிரந்தரமானதும், இளைப்பாறற் சம்பளம் உடையதுமாகும். விதவையர் அனுதையர் உபகாரச்சம்பளத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தவேண்டும்.

4. **தேவையான தகைமைகள் :**

(1) (அ) அரசாங்க தொழிற்சாலையில் அல்லது அதை ஒத்த வேறு அரசாங்க நிலையங்களில் எந்திரப் பொறியியற் தொழில் பயில்பவராக அல்லது மேற்பார்வை ஓவசியராக (எந்திர முறை) 5 வருடத் தொழிற்பயிற்சியைத் திருப்திகரமாக முடித்தவராகவும்,

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு தனியார் நிலையத்தில் 5 வருட எந்திரத் தொழில் பொறியியல் பயிற்சி நெறியையும், செயல்முறைத் தொழில் நுட்பவியல் நிலையத்தில் பகுதி நேர விரிவுரையை மேற்கொண்டவராகவும்,

அல்லது

(இ) கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலாளர்களுக்கான எந்திர மின்சாரத் தொழில் பயிற்சி நெறியை 2 வருடங்களில் மேற்கொண்டவராகவும் இருப்பதுடன் அரசாங்கத் திணைக் களமொன்றில் மேற்பார்வை ஓவசியராக (எந்திரத் தொழில்) 3 வருடச் சேவை செய்தவராகவும்,

அல்லது

2 ஆம் தர உதவி முகாரி அலுவலாளர்களின் பதவி உயர்விற்காகப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கனிட்ட தொழில்நுட்ப அலுவலாளர் பரீட்சையில் சித்தி அடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரர் 21 வயதிற்குக் குறையாதவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்களுக்கு வயதெல்லை நிபந்தனை கிடையாது).

5. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) இணைத்தல் வேண்டும்.

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(2) உயர்கல்விச் சான்றிதழும், உயர்தொழிற் தகைமைச் சான்றிதழும்.

(3) விண்ணப்பதாரரின் பண்பைப்பற்றிக் கூறும் சமீபகாலத்திய நற்சான்றிதழ்கள் மூன்று (ஏற்கெனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து நற்சான்றிதழ்கள் வேண்டப்படமாட்டாது).

6. அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பலாம். திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதிக்குப்பின் எனக்குக் கிடைக்கப்பெற்ருல், தாமதத்திற்குச் செல்லுபடியான காரணங்கள் அவர்களாற் காட்டப்பட்டு, அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு சிபார்சு செய்யப்பட்டாலன்றி விதிக்கப்பட்ட திகதியின் பின் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்களின் விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவரை நியமனத்திற்காக விலக்கவோ முடியாதோ என்பதைத் திணைக்களத் தலைவர் குறிப்பிட்டாலன்றி அவரின் விண்ணப்பம் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

8. விண்ணப்பங்கள் இரத்மலானை, உள்ளூராட்சி அமைச்சின் நீர் வழங்கல், வடிகாலமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதிச் சிரேட்ட உதவிச் செயலாளர் (நிதியும் தாபனமும்) அவர்களுக்கு முகவரியிட்டனுப்பப்படவேண்டுமேயன்றி எனக்காவது அல்லது இப்பகுதியின் உத்தியோகத்தர் எவருக்காவது பெயர் குறிப்பிட்டு அனுப்பக்கூடாது.

9. பரீட்சார்த்திகள் குறிக்கப்பட்ட இடத்தில் நியமிக்கப்பட்ட நேரத்தில் நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளிக்கும்படி வேண்டப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது, விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். இது தொடர்பான பிரயாணச் செலவோ அல்லது ஏனைய செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

10. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

டபிள்யூ. பத்மநாதன்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
(நிதியும் தாபனமும்),
உள்ளூராட்சி அமைச்சு.

நீர்வழங்கல், வடிகாலமைப்பு,
உள்ளூராட்சி வேலைகள் பகுதி,
இரத்மலானை,
1969 ம் ஆு ஜூலை மீ 5 ந வ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**எந்திர முகாரி பதவிகள்—தரம் 3**

**உள்ளூராட்சி அமைச்சு, நீர்வழங்கல், வடிகாலமைப்பு உள்ளூராட்சி வேலைகள் பகுதி**

1. முழுப்பெயர் :————.
(தனித்த எழுத்தில்)

2. தபால் முகவரி :————.
(முகவரி மாற்றம் உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்)

3. தேசிய இனம் :————.
(வம்சாவழியா அல்லது பதிவுப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக. பதிவுப் பிரசையாயின் பதிவுப்பத்திரத்தின் தொடர்பு இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

4. (அ) பிறந்த திகதி :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)
(ஆ) விண்ணப்பம் முடியும் திகதியன்று சரியான வயது :————.

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரரின் தகப்பன்வழிப் பாட்டன் :————.

6. விவாகமானவரா அல்லது தனிப்பட்டவரா :————.

7. (1) கல்வித் தகைமைகள் :————.
(2) உயர்தொழிற் தகைமைகள் :————.
(3) ஏனைய விசேட தகைமைகள் :————.
(சான்றிதழின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

8. நற்சான்றிதழ் அளிப்போரின் பெயர், பதவிப் பெயர், முகவரி :
(1) ————.
(2) ————.
(3) ————.

9. பாடசாலையை விட்ட காலம் முதல் பார்த்த தொழில் விபரங்கள் :
(1) வகித்த பதவி :————.
(2) சேவை செய்த காலம் :————.
(3) வேலையை விடுவதற்குரிய காரணங்கள் :————.

10. தற்போதைய தொழில் :
(1) பதவி, தரம், நியமிக்கப்பட்ட திகதி :————.
(2) உபகாரச்சம்பளம் உடையதா/உபகாரச்சம்பளம் அற்றதா : ————.
(3) தற்போதைய அடிப்படைச் சம்பளமும், சம்பள அளவுத்திட்டமும் :————.

11. பிரசுரத்தின் 4 (1) ஆம் பந்தி நியதிகளின்படி உள்ள தகைமைகளை தெளிவாகக் கூறுக :
(அ) ————. (இ) ————.
(ஆ) ————. (ஈ) ————.

இந்த விண்ணப்பத்தில் என்னுல் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் அத்தாட்சிப் படுத்துகின்றேன். இதில் கொடுக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றனவையாகவோ தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவிற்குப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் நஷ்டஈடின்றி வேலைநீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

7-1087—25.7.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,864

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

### இரண்டாம் நிலைப் பதிப்பாளர் பதவிகள்
### (சிங்களம், தமிழ்)

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பின்வரும் பாடங்களில், சிங்களத்திலும் தமிழிலும் இரண்டாம் நிலைப் பதிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பொருளளவில் கீழ்க் காணும் மாதிரிப்படிவத்தில், 13.8.69 அன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| எந்திரவியல் | .. | சிங்களம் |
| கணிதம் | .. | சிங்களம் |
| விலங்கியல் | .. | சிங்களம், தமிழ் |
| இரசாயனவியல் | .. | சிங்களம், தமிழ் |
| தாவரவியல் | .. | சிங்களம், தமிழ் |
| கல்வி | .. | சிங்களம், தமிழ் |
| சட்டம் | .. | சிங்களம் |
| வரலாறு | .. | சிங்களம், தமிழ் |
| வணிகம் | .. | சிங்களம், தமிழ் |
| புவியியல் | .. | சிங்களம் |

**2. சம்பள அளவுத்திட்டம்.**—பட்டதாரிகள் :—

ஆண்டுக்கு ரூபா 3,900 இலிருந்து, ரூபா 6,590 வரை. இது 8 ஆண்டுக்கு ரூபா 180 ஆண்டுச் சம்பள உயர்வையும் 5 ஆண்டுக்கு ரூபா 240 ஐயும் கொண்டது. ரூபா 5,340 இற்கு முன் வினைத் திறமைகாண் தடையொன்றுண்டு.

பட்டதாரிகளல்லாதவர்.— ரூபா 2,580 இலிருந்து ரூபா 4,800 வரை. இது பதினொரு ரூபா 120 ஆண்டுச் சம்பள உயர்வையும் ஐந்து ரூபா 180 உயர்வையுங் கொண்டது.

**3. நியமன நியதிகள்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை ; இளைப்பாற்றுச் சம்பள விதிக்குட்பட்டவை. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் விதவைகள் அனுதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும்.

**4. கல்வித் தகைமைகளும் பிறவும்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்தியான சான்று காட்டவேண்டும். 13.8.69 தேதியில் 21 வயதிற்குக் குறையாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். எலவே, அரசாங்க சேவையினுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் உயர்ந்த எல்லை அமையாது.

(ii) மிகச் சிறந்த ஒழுக்கமும் உடனலமும் உள்ளவராக இருக்க வேண்டும்.

(iii) பின்வரும் பாடங்களுள்ளே குறைந்தது இரண்டினையாவது பொதுப் பட்டப் பரீட்சைக்குக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிற் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது தேவையான பாடங்களிலொன்றிற் சிறப்புப் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும். முதலாம் இரண்டாம் வகுப்புச் சிறப்புப் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தமிழ்/சிங்களத்தில் மிகச் சிறந்த தேர்ச்சியுள்ளவராக இருத்தல் வேண்டும். இத்தேர்ச்சி 5 ஆம் பந்தியிற் குறிப்பிட்டுள்ளபடி எழுத்துப் பரீட்சையிற் சோதிக்கப்படும்.

**குறிப்பு.**—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்/ஆட்சி மொழித் திணைக்களம் (வெளியீட்டுப் பிரிவு) ஆகியவற்றிலுள்ள அலுவலரும், அரசாங்க சேவையில் ஐந்து ஆண்டு திருப்தியான சேவையாற்றிய மொழி பெயர்ப்பாளரும், கீழ்க்காணும் பாடங்களும் எவையேனும் இரண்டுடன், பின்வரும் தகைமைகளும் ஒன்றைக் கொண்டவராக இருப்பின் விண்ணப்பிக்கத் தகுதியுடையராவர்.

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இடைநிலை/முதல் தேர்வு,

(ii) உயர் பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

தேவையான பாட விபரங்கள் வருமாறு:—

எந்திரவியல் : (சிங்களம்) எந்திரவியற் சிறப்புப் பட்டம், அல்லது தூய கணிதம், பௌதிகவியல் என்பனவற்றைப் பாடங்களாகக் கொண்ட விஞ்ஞானப் பட்டம்.

கணிதம் : (சிங்களம்) கணிதத்திற் சிறப்புப் பட்டம், அல்லது தூய கணிதத்தையும், பிரயோக கணிதத்தையும் பாடமாகக் கொண்ட பொதுக் கலைப் பட்டம்.

விலங்கியல் : (சிங்களம், தமிழ்) விலங்கியலிற் சிறப்புப் பட்டம் அல்லது இரசாயனவியல், விலங்கியலைப் பாடங்களாகக் கொண்ட பொதுப் பட்டம்.

இரசாயனம் : (சிங்களம், தமிழ்) இரசாயனச் சிறப்புப் பட்டம் அல்லது இரசாயனம், கணிதம் என்பவற்றைக் கொண்ட பொதுப் பட்டம்.

தாவரவியல் : (சிங்களம்) தாவரவியற் சிறப்புப் பட்டம் அல்லது இரசாயனவியலுடன் தாவரவியல் அல்லது விலங்கியலைப் பாடங்களாகக் கொண்ட பொதுப் பட்டம்.

கல்வி : (சிங்களம், தமிழ்) கல்வியிற் பட்டம், அல்லது மெய்யியற் சிறப்புப் பட்டம், அல்லது மெய்யியலை ஒரு பாடமாகக் கொண்ட பொதுப்பட்டத்துடன் கல்வியில் டிப்புளொமா அல்லது சமூகவியலில் சிறப்புப் பட்டம்.

சட்டம் : (சிங்களம்) சட்டப்பட்டம் அல்லது சட்டத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம்.

வரலாறு : (சிங்களம், தமிழ்) வரலாற்றுச் சிறப்புப் பட்டம் அல்லது வரலாற்றுடன் பொருளியல் அல்லது புவியியல் என்பனவற்றைப் பாடங்களாகக் கொண்ட பொதுப் பட்டம்.

வணிகம் : (சிங்களம், தமிழ்) வணிகப் பட்டம் அல்லது பொருளியற் சிறப்புப் பட்டம், அல்லது பொருளியல், புவியியல் என்பவற்றைக் கொண்ட பொதுப் பட்டம் அல்லது வணிகத்தில் டிப்புளொமா.

புவியியல் : (சிங்களம்) புவியியல் சிறப்புப் பட்டம் அல்லது புவியியலுடன் புவிச்சரிதவியல் அல்லது பொருளியல் கொண்ட பொதுப் பட்டம்.

**தெரிவு செய்யும் முறை.**—ஓர் எழுத்துப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

6. விண்ணப்பிக்குந் தகைமை வாய்ந்த அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள் தத்தம் தலைவர்களூடாகவே விண்ணப்பிக்க வேண்டும். நிரந்தர உத்தியோகத்தர்களைப் பொறுத்தமட்டில், அவர்களது திணைக்களத் தலைவர்கள், அவர்கள் தெரிவு செய்யப்பட்டால், புதிய வேலை ஏற்க விடப்படுவர் என இசைவளித்தால் மட்டுமே, அவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். குறிப்பிட்ட தேதிக்குப் பின்வரும் விண்ணப்பங்கள் உரிய திணைக்களத் தலைவர்களால் அவை காலந் தாழ்ந்ததற்குரிய காரணங்களை முறைப்படக் காட்டி, அவை ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டுமென்று எடுத்துரைக்கப்பட்டாலொழிய ஏற்கப்படமாட்டா.

விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளையல்ல) விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம் (மு.கு.: ஞானநீராட்டுப் பத்திரமோ உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்துக்காக வழங்கப்படும் பிறப்புப் பதிவுப் பத்திரமோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது),

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்,

(இ) விண்ணப்பதாரியின் ஒழுக்கம் பதவிக்குரிய தகவுடைமை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் அண்மையிற் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள், (எலவே அரசாங்க சேவையினுள்ளவர்கள், இவ்வுபபிரிவின் கீழ் நற்சாட்சிப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை),

(ஈ) பெற்றிருப்பின், உயர் தொழில் தகைமை, அல்லது தொழினுட்பத் தகைமை, அல்லது இவ்விரு தகைமைகளும் பற்றிய சான்றிதழ்கள்,

(உ) சிங்களம்/தமிழில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

8. விண்ணப்பங்களையும், அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் "ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 58, சேர் எனெஸ்ற் சில்வா மாவத்தை, கொழும்பு 3" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேரடியாக அனுப்பக் கூடாது.

9. அரசாங்க சேவையினுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

10. விண்ணப்பங்கள் யாவும் பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவு தேதியின் பின் 7 நாட்களுக்குள் விண்ணப்பம் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்படாத விண்ணப்பதாரிகள் உடனே கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டின்படி செய்யத் தவறியவர்கள் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

சௌரத் வணிகத்துங்க,
பதில் ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

கல்விவெளியீட்டுத் திணைக்களம்,
த. பெ. 520,
கொழும்பு 3.

விண்ணப்பப் படிவம்

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**
**இரண்டாம் நிலைப் பதிப்பாளர் பதவிகள்**
**(சிங்களம், தமிழ்)**

விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் பாடம் : . . . . . . . . .

1. முழுப் பெயர் : ———.
   (அ) வழங்கும் பெயர் : ———.
   (ஆ) பிற பெயர்கள் : ———.
2. முகவரி : ———.
3. பிறந்த தேதியும் 13.8.69இல் வயதும் : ———.
4. நாட்டினம் எவ்வாறு பெறப்பட்டது : ———.
5. பின்வருவோர் பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பதாரி : ———.
   (ஆ) விண்ணப்பதாரியின் தந்தை : ———.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பாட்டன் : ———.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பூட்டன் : ———.
6. மணமானவர்/ஆகாதவர்/தாரமிழந்தவர் : ———.
7. கல்வி கற்ற பாடசாலைகள், கல்லூரிகளின் பெயர்கள் : ——— (பொதுக் கல்விக்காகப் பிரவேசித்த, விலகிய தேதிகளுடன்)
8. கலைத்துறைக் கல்வித் தகைமை—வகுப்பும் பாடங்களும் :———
9. சிங்களம்/தமிழில் பெற்றிருக்கும் மிகக் கூடிய தகைமைகள் : ———.
10. மொழிபெயர்ப்புத் துறையில் பெற்றுள்ள அறிவு அனுபவம் பற்றிா முழு விபரம் : ———.
11. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்டபின் பார்க்குந் தொழில், நியமன, விலகல் தேதிகளுடன் : ———.
12. சிறப்புரிமைகள், தகைமைகள், அனுபவம், பயிற்சி, ஏதாவதிருப்பின் : ———.
13. உம் தனிவாழ்வில் உம்முடன் நெருங்கிப் பழகிய பொறுப்புடையவராய் ஆயின் (இனத்தவரல்லாதவராயிருக்கும்) மூன்று சான்றுளர்களின் பெயர், விலாசம், பதவி என்பன :———.
    (எலவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் குறிப்பிடத் தேவையில்லை.)
14. பிற விபரங்கள் : ———.

இவ்விண்ணப்பத்தில், நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும், உண்மையானவையும், சரியானவையுமென நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இவற்றில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், தெரிவு செய்யப்பட்டபின் காணப்படின் எவ்வித நட்டமுமின்றி நான் விலக்கப்படுவதற்கும் பாத்திரமாவேன் என அறிவேன்.

———,
விண்ணப்பதாரியின் கைச்சாத்து.

தேதி : ———.

7-1067—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

---

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நுண்ணுய்வு உத்தியோகத்தர் பதவிகள்**

மேற்குறிக்கப்பட்ட பதவிகள் சம்பந்தமாக 1969 ஆம் ஆண்டின் ஜூலை 11 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியில் தோன்றிய விளம்பரத்தைப் பார்க்கவும்.

சிங்கள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தின் 10 (ii) ம் கூட்டில் உள்ள “ 4 (எ) இருந்து (பீ) ” என்னும் சொற்களை “ 4 (பீ) இருந்து (டீ) ” என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பங்களின் முடிவு திகதி 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

ச. சிற்றம்பலம்,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
த. பெ. 515,
செனற் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 18 ந் வ.

7-1099—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

---

## திருக்கோணமலை மாவட்டத்தில் பதவியாக் குடியேற்றப் பிரிவிற்கு பிறப்பு இறப்பும், கட்டுக்குளம்பற்று கிழக்குப் பிரிவிற்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவி

பதவியாக் குடியேற்றப் பிரிவு பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு ஓகத்து (ஆவணி) மாதம் 31 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சோமபால குணதீர,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
திருக்கோணமலை,
1969 ம் ஆண்டு யூலை மீ 12 ந் வ.

7-1090—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

### கண்டி மாவட்டத்தில் நோர்வுட் பிரிவிற்கு பிறப்பு, இறப்பும்—உடபுலத்கம பிரிவிற்கு விவாக (பொது, கண்டியர்) பதிவாளர் பதவி

நோர்வுட் பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களே பொறுத்தளவில் இவ்வயதெல்லே கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலீஸ் ஸ்தானம், சன சமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும் இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

டப்ளியூ. ஜே. பெர்ணுந்து,
மாவட்ட பதிவாளர்.

கண்டி,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 12 ம் திகதி.

7-989—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

### பரீட்சைப் பகுதி

**ஆசிரியர் கலாசாலைப் பிரவேசப் பரீட்சை (விசேட பயிற்சிகள்)—1969**

மேற்படி பரீட்சை சம்பந்தமாக 1969 மே 9 ஆந் தேதி வெளியிடப்பட்ட 14,853 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 9 (அ) (iv) ஐயும் 9 (ஆ) (iii) ஐயும் நீக்கி அதற்குப் பதிலாகக் கீழ்க்காணும் பந்தியைச் சேர்க்க :—

9 (அ) (iv) விஞ்ஞானம் (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) இரண்டு வினாப்பத்திரங்கள்.

விஞத்தாள் i—1½ மணி }
விஞத்தாள் ii—2½ மணி } 200 புள்ளிகள்

இவ்விஞத்தாள்கள் விஞ்ஞானப் பயிற்சிக்குப் பிரவேசிக்கும் பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம்.

9 (ஆ) (iii) விஞ்ஞானம், விஞத்தாள் i. இவ்விஞப்பத்திரம் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் என்பவற்றுக்குரிய விஞக்களைக் கொண்டதாக இருக்கும். குறுகிய விடைகளைப் பெறக்கூடிய வகையில் இவை அமையும். விஞத்தாள் ii பௌதிகவியல் விஞக்களையும், இரசாயனவியல் விஞக்களையும் கொண்டதாக இருக்கும்.

கே. ரீ. டபிள்யூ. சுமனசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு யூலை மீ 15 ந உ.

7-1076—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கமத்தொழிற்றிணைக்களம்

**யாழ்ப்பாணம் தின்னவேலி கமத்தொழிற் பாடசாலைப் பண்ணையில் உள்ள 15 கியூப் மாட்டுரத்தை விற்பனை செய்வதற்காகக் கேள்விகள் கோரப்படுகின்றன**

யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (பண்ணை முகாமையும் ஆக்கமும்) யினுல் யாழ்ப்பாணம் தின்னவேலி கமத்தொழிற் பாடசாலைப் பண்ணையில் உள்ள 15 கியூப் மாட்டுரத்தை விற்பனை செய்வதற்கான கேள்விகள் 1969.8.15 ஆம் திகதி மு. ப. 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்காரர்களுக்கு காரியாலய நேரத்தில் பண்ணையிலுள்ள மாட்டுரத்தைப் பரீட்சார்த்தமாகப் பார்ப்பதற்கு அனுமதியுண்டு. அறவிடும் பணம் ஒரு கியூப்பிற்கு எவ்வளவு எனக் குறிப்பிட வேண்டும்.

3. கேள்வி ஒன்றுக்கு ரூபா 10/- வைப்புப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்தால் கேள்விகள் முடிவுறும் தினத்திற்கு முந்திய தினம் நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாணம் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யினுல் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கமத்தொழிற்றிணைக்களம், பேராதனையிலும் அல்லது எவ்வரசாங்கச் செயலகங்களிலும் வைப்புப் பணம் செலுத்தலாம்.

4. கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதியில் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்னும் மூகவரிக்கு அனுப்புவதுடன் உறையின் இடதுபக்க மேல் மூலையில் " யாழ்ப்பாணம் தின்னவேலி கமத்தொழிற் பாடசாலைப் பண்ணையில் உள்ள மாட்டுரத்தை விற்பனை செய்வதற்கான கேள்விகள் " எனக் குறிப்பிட வேண்டும்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணைப் பாடசாலை அதிபரினுல் குறிக்கப்படும் தினத்தில் மாட்டுரத்திற்கான பணத்தைச் செலுத்தி பண்ணை அதிபரிடமிருந்து உரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் குறிக்கப்பட்ட உரத்தொகையை பெற்றுக் கொள்ளத் தவறின் அவற்றை வேறு முறையில் விற்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அவருடைய வைப்புப் பணம் அரசாங்கத்தால் பறிமுதலாக்கப்படுவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும். அத்துடன் அவரிடம் இருந்து வேறு ஏதும் அறவீடு செய்வதற்கு அரசாங்கத்திற்கு எந்த விதத் தடையும் இல்லை.

இது சம்பந்தமாக மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணம் தின்னவேலி பாடசாலை அதிபரிடம் நேரிலோ கடிதமூலமோ பெற்றுக்கொள்ள முடியும்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க. க. வும் ப.).

பேராதனை,
10.7.1969.

7-963—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

## 1969–70 நிதி வருடத்துக்குக் காரைநகரில் துணிமணிகள் சலவை செய்வதற்குரிய கேள்விப் படிவங்கள்

1.10.1969 ஆம் தேதி தொடங்கி 30.9.1970 ஆம் தேதி வரைக்கும் மேற்படி சேவை செய்வதற்கு இலங்கை அரச கடற்படைக் கேள்விச் சபைத்தலைவரால் த. பெ. எண். 593, கொழும்பில் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9 ஆம் தேதியன்று முற்பகல் 10.30 மணி மட்டும் கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மேற்குறிப்பிட்ட சேவைகளுக்குரிய கேள்வி விண்ணப்பப் படிவங்கள் கொடிமர வீதி, கொழும்பு 1 இல் உள்ள இலங்கை அரச கடற்படைப் பிரதம பதவி உத்தியோகத்தர் (ஆதாரம் நடைமுறைகள்) என்பவரால் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ஆம் தேதியன்று நண்பகல் 12 மணிமட்டும் கொடுபடும். படிவங்களுக்கு விண்ணப்பதாரர் தத்தமது நிதி நிலைபரங்களைப் பற்றிய விபரங்களுடன் எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

3. திரும்பப் பெறக்கூடிய கேள்விக் கட்டுப்பணம் ரூபா 75/– வீதம் தனித்தனி ஒவ்வொரு சேவைக்குரிய கேள்விக்கும் பணம் கட்டிய பின்னரே படிவங்கள் வழங்கப்படும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. பணம் காசுக் கட்டளைகள் மூலம் அனுப்புவதாயின் காசுக்கட்டளை **கடற்படைத் தளபதி** என்ற முகவரிக்கு இருக்கவேண்டும்.

4. கேள்விப் படிவங்களுக்கு விண்ணப்பிப்போர் தமது முழுப் பெயரையும் முகவரியையும் கொடுக்க வேண்டும். தேவைப்படுமாயின், ஒப்பந்த வேலையை நிறைவேற்றுதற்குரிய தகுதியை நிரூபிப்பதற்குப் போதிய அத்தாட்சி காட்டவேண்டும்.

இ. கதிர்காமர்,
" றியர் அட்மிரல ",
கடற்படைத் தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
த. பெ. எண். 593,
கொழும்பு,
1969 ம் ஆடு யூலை மீ 15 ந உ.

7–1066—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

---

இல. எல். டபிள்யு./1/34 (ii)

## புத்தளம் கச்சேரி

அரசாங்கத்தில் ரூபா 25,000 க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்துள்ள தனிப்பட்ட கொந்திருத்துக்காரர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆதியனவற்றிலிருந்து கீழ்க்காணும் வேலையை செய்வதற்கான கேள்விகள், 1969 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை காணிக்கமிஷனர் இலாகா கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இகலக்கட்டுவ – போகமுவ – பாங்குளாவ வீதியின் இரண்டு மைல் தூரத்தை திருத்தியமைத்தல்.

2. கேள்விகள் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே மேலே கூறப்பட்ட வேலைக்கு இரு பிரதிகளில் நிரப்பப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். புத்தளம் கச்சேரியில் ரூபா 50 வைப்புப் பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டைக் காண்பித்தே மேற்கூறிய ஒவ்வொரு வேலைக்கான கேள்விப்பத்திரம் பெறமுடியும். கேள்விப் பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13 ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விகள் சம்பந்தமான ஏனைய விபரங்களும் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறமுடியும்.

3. கேள்விகள், கொழும்பு மகா செயலகத்தின் 357 ம் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படலாம். இன்றேல் பதிவுத்தபால் மூலம், தலைவர், கேள்விச்சபை காணிக்கமிஷனர் இலாகா, த. பெட்டி இல. 500, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

எம். டபிள்யு. எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர்,
புத்தளம்.

புத்தளம் கச்சேரி,
1969 ம் ஆடு யூலை மீ 16 ந உ.

7–1064—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

---

## புத்தளம் கச்சேரி

இல. எல். டபிளியு/11/1

அரசாங்கத்தில் ரூ. 15,000/– க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்துள்ள தனிப்பட்ட கொந்திராத்துக்காரர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆதியனவற்றிலிருந்து கம்மிறிஸ் கஸ்வேவா குடியேற்றத் திட்டத்தில் 12½ ஏக்கர் காட்டை வேட்டிச் சுட்டுத் துப்பரவாக்குவதற்கான கேள்விகள் 1969 ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 13 ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை புத்தளம் கச்சேரி கேள்விச்சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே இரு பிரதிகளில் நிரப்பப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். புத்தளம் கச்சேரியில் ரூ. 25/– வைப்பு பணமாகக் கட்டிய பற்றுச்சீட்டைக்காண்பித்தே கேள்விப்பத்திரம் பெற முடியும். கேள்விப் பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11 ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை விநியோகிக்கப்படும். கோள்விகள் சம்பந்தமான ஏனைய விபரங்களும் புத்தளம் கச்சேரியின் காணிக்கிளையில் பெறமுடியும்.

3. கேள்விகள், புத்தளம் கச்சேரியின் மேல்மாடியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படலாம் இன்றேல் பதிவுத்தபால் மூலம் தலைவர் கேள்விச்சபை, கச்சேரி, புத்தளம் எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் கொண்ட உறையின் இடது மேற் புறத்தில் " கம்மிறிஸ்கஸ் வேவாவில் காடுவெட்டுதற்கான கேள்விகள் " என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

எம். டபிள்யு. எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர், புத்தளம்.

புத்தளம் கச்சேரி,
1969 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதி.

7—1063—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

காக்காப்பள்ளி மின்சக்தி நெசவுக் கட்டிடத்தைத் திருத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள், தலைவர், கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 7, அவர்களால் 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 18 ம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பின்வரும் அரசாங்க இலாகாக்கள் ஏதாவதொன்றிலாவது கட்டிட வேலைக்கென ரூபா 30,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

1. பொதுமராமத்து இலாகா.
2. நீர்ப்பாசன இலாகா.
3. புகையிரத இலாகா.
4. கல்வி இலாகா.
5. பிரதான பொதுச் சௌக்கிய பொறியியலாளர் இலாகா.

3. கேள்விப் பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 100 ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 16 ம் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

பி. எச். பி. டி சில்வா,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல. டிஎ/டி/192,
கொழும்பு 7,
1969 ம் ஆடு ஆடி மீ 15 ந உ.

7–1041—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

## காணிப்பகுதி ஆணையாளர்

மாத்தறை மாவட்டத்துக்குள் அதபத்துகந்த கிராம அபிவிருத்தி பாதையில் அமைக்கும் போக்கு சம்பந்தமாக ரூபா 60,000 க்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு பகிரங்கவேலைப்பகுதி அல்லது நீர்ப்பாசனப் பகுதி அல்லது கல்விப்பகுதி வேலைகள் நிமித்தம் (அ) அரசாங்ககொந்துருத்துக்காரர் (ஆ) கூலியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் கேள்விப்பத்திரங்கள் மேற்படி வேலைகள் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இரண்டு பிரதிகள் ஒரே உறையில் லீல் வைக்கப்பட்டு தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்கள் " தலைவர் காணியாளர் இலாகா கேள்விப்பத்திரச்சபை, த. பெ. இலக்கம் 500, கொழும்பு " என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் கொழும்பிலுள்ள காலி மைதானத்திலுள்ள செயலாளர் அலுவலகத்திலுள்ள 3 ம் கட்டில் 357 ம் இலக்க அறையில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடப்படவேண்டும், அல்லது பதிவு தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் அதபத்து கந்த பாதையில் போக்கு அமைக்கும் சம்பந்தமான கேள்விப்பத்திரம் என்று குறிப்பிடல் வேண்டும். 1969.8.22 ந் திகதி பி. ப. 2.30 மணிக்குமுன் கேள்விப்பத்திரச் சபைத்தலைவருக்குக் கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும். அதே நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாய் இருக்கலாம்.

5. 1969.8.13 ந் திகதி பகல் 12 மணிவரை மாத்தறைக் கச்சேரியிலிருந்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். நியமிக்கப்பட்ட பத்திரங்களில் விண்ணப்பிக்காவிட்டால் ஆலோசனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

6. கேள்விக்காரர்கள் பிழை திருத்தங்கள் செய்திருந்தால் அழித்திருந்தால் ஒவ்வொரு திருத்தங்களும் கேள்விப்பத்திரகாரரால் ஒப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. கேள்விப்பத்திரங்கள் விநியோகிப்பதற்கு முன் ரூபா 50/— வைப்புப்பணமாக மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர்பேரில் கட்டப்பட்ட பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கும்போது தேவையான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். முதல் பந்தியில குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ் வைப்புப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்குரியவர்கள் இது பற்றியவர்களுக்கு அறிவித்தல் கடிதத்திலுள்ள தினத்திலிருந்து 10 நாட்களுக்குள், இதற்குரிய பிணைத்தொகையைக் கட்டி ஒப்பந்தத்தைச் செய்ய மறுத்தால் அன்னாரின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

9. கேள்விப்பத்திரங்களை ஒப்புக் கொண்டபடிக்கு கேள்விக்காரர்களால் கொடுக்கப்பட்ட விலாசத்துக்கு அனுப்பினால், கேள்விக்காரர்களுக்கு கிடைத்திருக்குமென்று நம்பப்படும். ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டதின் பிறகு மற்றும் வைப்புப் பணங்களைத் திருப்பிக்கொடுக்கப்படும்.

10. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர்கள் முழுத்தொகையில் 5% சத வீதத்தை, பிணைத்தொகையைக் கட்டி வேலை திருப்திகரமாக குறிப்பிட்டகாலத்தில் முடித்துக்கொடுப்பதற்கென, மாத்தறை அரசாங்க அதிபருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும். முதல் பந்தியில் குறிப்பிட்டுள்ள சங்கங்கள் இவ்வவைப்புப்பணம் கட்ட வேண்டிய அவசியமில்லை.

11. ஏதேனும் ஒரு கேள்வியை (டெண்டர்) அல்லது அதன் பகுதியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அரசாங்கத்துக்கு பூரண அதிகாரமுண்டு.

12. அரசாங்க வேலை திருப்திகரமாகச் செய்யப்படாத ஒப்பந்தக்காரரின் பட்டியலில், கொந்தருத்துக் கேள்வியாளரின் பெயர் இருந்தால, அன்னாரின் கேள்விப்பத்திரத்தை நிராகரிக்கப்படும்.

பி. டப்லிவ். லீ. த ஸில்வா,
அரசாங்க அதிபருக்காக,
மாத்தறை மாவட்டம்.

மாத்தறைக் கச்சேரி,
1969 ம் ஆண்டு யூலை மீ 10 ந உ.

7–993—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### திருகோணமலை உபபிரிவு

கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் திருகோணமலையிலுள்ள திருகோணமலைப் பெரும்பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 14 ம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்; அதன் பின் உடனே திறக்கப்படும்.

| வேலையின் விபரம் | ஒப்பந்தக்காரரின் பதிவுத் தொகை ரூ. ச. | கேள்விக் கட்டணத் தொகை ரூ. ச. |
|---|---|---|
| கற்கிடங்குக்குளம் புணருத்தாரணம் .. .. | 40,000 00 .. | 50 00 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக் கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் திருகோணமலை, அல்லை, கந்தளாய் ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 10 ம் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் அதே நீர்ப்பாசனப பொறியியலாளரின் அலுவலகத்தில், வேலைக்கெதிரே குறிக்கப்பட்ட கேள்விக் கட்டணத்தொகை கேள்விக் கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக் கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டு காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்விகளைப்பற்றிய மேலதிகமான விபரங்களைத் திருகோணமலை உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜி. பி. போல்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
திருகோணமலை உப பிரிவு.

உள் துறைமுக வீதி,
திருகோணமலை, 15.7.1969.

7–1089—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு—5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலிருள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1969 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை பஸ்களின் சேரிடச் சுருள்களுக்கான பருத்திப் புடவையை வழங்குவதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிக்கு முந்திய திகதி நண்பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதான பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்பட வேண்டும். கொழும்பு–5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்திரிடம் கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100 ஐ காசாகக் கட்டவேண்டும். கட்டுப்பணத்துக்கான பணம் கட்டுத்துண்டை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகப் பகுதி, 200, கிருல வீதி, கொழும்பு 5.

பிரதம விநியோக உத்தியோகத்தர்,இலங்கைப் போக்குவரத்துச் சபை.

7–1092—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தீசல் இழுபொறியும் துணைக் கருவிகளும் விநியோகம்

தீசல் இழுபொறியும் துணைக் கருவிகளும் விநியோகித்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 1969 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 16 ஆந் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். அவைகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் மேலுள்ள 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, விதிக்கப்பட்ட நேரம் திறக்கப்படும்.

3. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் (விநியோகக் கிளையிலிருந்து) 1969 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 15 ஆந் திகதி பி. ப. 4.30 மணிவரை பெறற்பாலனவான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப் படவேண்டும்.

4. சகல கேள்விகளும் இணைப்படியில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் " தீசல் இழுபொறியும் துணைக்கருவிகளும் விநியோகம் " என அடையாளமிடப்பட வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலம் பதிவு செய்து அனுப்பப் படலாம். உள்ளூர்க் கேள்வியாளர் ஒருவர் தனது கேள்விப் பத்திரத்தை மேற்குறித்த முறையில் அனுப்ப விரும்பாவிடின், காகித உறையில் வைத்து முத்திரை பொறிக்கப்பட்ட தனது கேள்விப் பத்திரத்தை கேள்வியாளர் அல்லது அவருடைய முகவர் (காகித உறையின் மேல், 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளமும் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்) கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அதனைப் பெற்றுக் கொண்டு பெற்றமையை ஒப்புக் கொள்தற்கான அறிவித்தலைக் கொடுத்தற்கு அன்னாருக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

6. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சில் (கொடுப்பனவு கிளையில்) அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள யாதேனும் கச்சேரியில் கேள்வி வைப்புப் பணமாக ரூ. 100கட்டி அப்பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம்.

7. விதிக்கப்படும் பிரகாரம் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (விநியோகக் கிளைக்கு) விண்ணப்பித்து மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பெறலாம்.

டபிள்யு. கன்னங்கரா,
கணக்காளர், விநியோகம்,
நிரந்தரக் காரியதரிசிக்காக,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ௵ ஜுலை ௴ 18 ந் உ.

7–1109—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

## ஆயுள்வேத இலாகா

### கொழும்பு, கொட்டா ரோட், இல. 325 ல் உள்ள மத்திய ஆயுள்வேத வைத்தியசாலைக்கு உலர்ந்த, பச்சை—யுனானி இதர பொது மருந்துகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

1969 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி முதல் 1970 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரையுள்ள காலத்திற்கு உலர்ந்த, பச்சை—யுனானி இதர பொது மருந்துகள் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை இத்துடன் அணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிட்ட பிரகாரம், அங்கீகாரம்பெற்ற கூட்டுறவு வியாபாரத்தலம், அல்லது கம்பனிகளையுடைய இலங்கையரிடமிருந்து 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆந் திகதி முற்பகல் 10 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பத்திரங்கள் முத்திரையிடப்பட்டு தலைவர், கேள்விப்பத்திரசபை, ஆயுள்வேதத் திணைக்களம், 325, கொட்டா ரோட், கொழும்பு 8, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரை இடப்பட்டு, உறையின்மேல், இடது மூலையில் கேள்விப்பத்திர சேவையின் தன்மையும், உறையின் மேல் கேள்விப்பத்திரகாரரின் பெயர், விலாசத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு தலைவர், கேள்விப்பத்திரசபை, ஆயுர்வேத திணைக்களம், 325, கொட்டா ரோட், கொழும்பு 8, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 8, 325, கொட்டா ரோட்டில் உள்ள ஆயுர்வேதத் திணைக்களத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும், அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரகாரர் அல்லது அவரின் பிரதிநிதி மூலமாக, முத்திரையிடப்பட்ட பத்திரங்களை நேரடியாகக் கையளிக்க விரும்பினால், முதலாம் பந்தியில் குறிப்பிட்ட விலாசத்திலிருக்கும், ஆயுள்வேதத் திணைக்கள காரியாலய உதவியாளரிடம் கையளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்பட்டதும் அதற்கான ரசீது கேள்விப்பத்திரம் கையளித்தவரிடம் கொடுக்கப்படும். குறிப்பிட்ட முடிவு திகதியன்று முற்பகல் 10 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரகாரர், கேள்விப்பத்திரங்களைத் திறப்பதற்காகக் குறிக்கப்பட்ட நேரம், திகதியன்று முதலாம் பந்தியில் குறிப்பிட்ட விலாசத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரகாரர்களின் முன்னிலையில் கேள்விப்பத்திரகாரரின் பெயரும், கேள்வித் தொகையும் வாசிக்கப்படும். எந்தக் கேள்விப்பத்திரகாரர் தமது கேள்விப்பத்திரங்களை மறு பரிசீலனை செய்ய விரும்பினால் ஒப்படைக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தின் பிரதியினை கேள்விப்பத்திர சபைத் தலைவரிடம் சமர்ப்பித்து, அவரின் உத்தரவின்படி மறு பரிசீலனை செய்யலாம்.

5. கீழே குறிப்பிட்ட 2 வது பகுதியின்படி, கட்டுப்பணத்தைக் கொழும்புக் கச்சேரி தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ அல்லது கொழும்பு யோர்க் வீதியிலுள்ள, இலங்கை வங்கியிலோ செலுத்திக் கேள்விப்பத்திரம் கொடுக்கப்படுமுன்னர் கொண்டுவருதல் வேண்டும். கொழும்பு, யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியிற் பணம் செலுத்துவதற்கான பத்திரங்கள், கொழும்பு 8, 325, கொட்டா ரோட்டிலுள்ள மத்திய ஆயுள்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்குரிய பத்திரத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தாவிடில் பணம் வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் தேவையான கட்டுப்பண ரசீதுடன் 17.8.1969 ல் நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கொழும்பு 8, இல. 325, கொட்டா ரோட்டிலுள்ள மத்திய ஆயுள்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரியிடம், தேவையான கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். தபால் மூலம் கேள்விப்பத்திரங்களை பெற விரும்பின் பணம் செலுத்திய பற்றுச்சீட்டை முன்கூட்டியே அனுப்பினால், கேள்விப்பத்திரம் தாக்கல் செய்யும் கடைசித் திகதிக்கு முன்பு அனுப்புவதற்கு ஏதுவாயிருக்கும்.

6. இறக்குமதி செய்யவேண்டிய மருந்து வகைகளுக்கு அவசியப்படின் அந்நியச் செலாவணி ஒதுக்கப்படும். சகல கேள்விப் பத்திரகாரர்களும் தாம் இறக்குமதிசெய்து விநியோகிக்க உத்தேசித்திருக்கும் மருந்து வகைகள் பற்றிய அந்நியச் செலாவணி அம்சத்தையும் ரூபாய்ச் செலவையும் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரகாரர்களால் கொடுக்கப்பட்ட குறைந்த அந்நியச் செலாவணி அம்சங்களை உட்படுத்தும் நிவேதனங்கள் விசேஷமாகக் கவனிக்கப்படும். இறக்குமதி செய்யவேண்டிய மருந்து வகைகள் பற்றிய அந்நியச் செலாவணி ஒதுக்கல், அம்மருந்துகள் உள்ளூரில் பெறமுடிதல் அல்லது பெறமுடியாதல் எப்போதும் தொடர்புடையதாயிருக்கும்.

7. இது சம்பந்தமான மேலதிக விபரங்கள், கொழும்பு, 8, இல. 325, கொட்டா ரோட்டிலுள்ள, மத்திய ஆயுள்வேத வைத்தியசாலை, வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யூ. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

கொட்டா ரோட்,
கொழும்பு 8,
1969 ம் ௵ ஜுலை ௴ 17 ந் உ.

### அட்டவணை

| சேவை | கேள்விப்பத்திரக் கட்டணம் | பிணைப்பணம் | கேள்விப்பத்திர முடிவு திகதி |
|---|---|---|---|
| 1.10.69 முதல் 30.9.70 வரை ஆயுள்வேத வைத்தியசாலைக்கு உலர்ந்த, பச்சை, யுனானி இதர பொது மருந்துச் சரக்குகள் விநியோகம் செயதல் | ரூபா 100 | கேள்விப்பத்திர முழுத் தொகையின் ஐந்துவீதம் | 18.8.1969 |

7–1077/1—25.7.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,864

## ஆயுள்வேத இலாகா

### அனுராதபுர ஆயுள்வேத வைத்தியசாலைக்கு உலர்ந்த பச்சை, பச்சை மூலிகைகள், இதர பொது மருந்துகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ம் திகதி வரையுள்ள காலத்திற்கு உலர்ந்த, பச்சை, பச்சை மூலிகைகள், இதர பொது மருந்துகள் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை இதனுடன் அணைக்கப்பட்ட அட்டவணையிற் குறிப்பிட்ட பிரகாரம் அங்கீகாரம்பெற்ற கூட்டுறவு வியாபாரத்தலம், தனிப்பட்ட வியாபாரத்தலம் ஆகியனவுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 18.8.69 முற்பகல் 10 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பத்திரங்கள் அரசாங்க முத்திரையிடப்பட்டு, ஆயுள்வேத அதிபர், ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா ரோட், கொழும்பு என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்டு உறையின் மேல் இடதுபக்க மூலையில் கேள்விப்பத்திர சேவையின் தன்மையையும் உறையின்மேல் கேள்விப்பத்திரக்காரரின் பெயர், விலாசத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு, ஆயுள்வேத அதிபதி, ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா ரோட், கொழும்பு 8 என் விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபாலில் ஆயுள்வேத அதிபர், ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா ரோட், கொழும்பு 8, கேள்விப்பத்திர பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் கேள்விப்பத்திரங்களை அனுப்ப விரும்பாத கேள்விப்பத்திரக்காரர்கள் தாமாகவோ அல்லது அவரின் பிரதிநிதி மூலமாகவோ நேர்முகமாக அனுப்பி ஆயுள்வேத இலாகாவில் (1 ம் பந்தியிற் குறிப்பிட்டபடி), இதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் உதவிக் காரியதரிசியிடம் கேள்விப்பத்திரங்களை ஒப்படைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டதும் அதற்கென ரசீது கேள்விப் பத்திரகாரர்கட்கு உதவிக் காரியதரிசியால் வழங்கப்படும். குறிப்பிட்ட முடிவு திகதி முற்பகல 10 மணிக்குப் பின்னர் கிடைக்கும் எக்கேள்விப்பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதைக் கவனிக்குக.

4. கேள்விப்பத்திரகாரர் கேள்விப்பத்திரங்களைத் திறப்பதற்காகக் குறிப்பிட்ட நேரம், திகதி, இடத்தில் பிரசன்னமாவதற்கு அனுமதிக்கப் படுவர். கேள்விப்பத்திரகாரரின் முன்னிலையில கேள்விப்பத்திரகாரரின் பெயர்களும் விபரங்களும வாசிக்கப்படும். கேள்விப்பத்திரகாரர் யாதேனும் தமது கேள்விப்பத்திரத்தைத் திரும்பவும் பரிசீலனை செய்ய விரும்பினால், ஒப்படைக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தின் பிரதியை கேள்விப்பத்திர சபைத் தலைவருடைய ஒழுங்கின்படி மீண்டும் பரிசீலனை செய்ய அனுமதிக்கப்படுவர்.

5. கீழே குறிப்பிடப்பட்ட 2 வது பந்தியின்படி கட்டுப்பணத்தை கொழும்புக் கச்சேரி தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ அல்லது கொழும்பு, யோக் வீதியிலுள்ள இலங்கை வங்கியிலோ எனது பெயரில செலுத்தி, பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு முனபதாக ஒப்படைக்க வேணடும். கொழும்பு, யோக் வீதியிலுள்ள இலங்கை வங்கியிற் கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கான பத்திரங்கள கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள 325 ம் இலக்கத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணத்திற்கான பத்திரமின்றி பணம் செலுத்த இலங்கை வங்கி அனுமதி அளிக்கமாட்டாது. மனுதார் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டை ஆயுள்வேத வைத்தியசாலையிலிருக்கும வைத்திய அதிகாரியின் கந்தோரில் ஒப்படைத்து, தேவையான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தபால்மூலம் கேள்விப் பத்திரம பெறவரும்பின் பணம் செலுத்திய பற்றுச்சீட்டை முன்கூட்டியே அனுப்பினால் தகுந்த காலத்தில் அனுப்பிவைக்கப்படும. இதர விபரங்கள் கொழும்பு 8, கொட்டா ரோட், 325 ம இலக்க ஆயுள்வேத மத்திய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம பெற்றுக்கொள்ளலாம.

6. இறக்குமதி செய்யவேண்டிய மருந்து வகைகளுக்கு அவசியப்படின் அந்நியச் செலாவணி ஒதுக்கப்படும். சகல கேள்விப்பத்திரகாரர்களும் தாம் இறக்குமதி செய்து விநியோகிக்க உத்தேசித்திருக்கும மருந்து வகைகள் பற்றிய அந்நியச செலாவணி அம்சத்தையும் ரூபாயச செலவையும் குறிப்பிடல வேண்டும். கேள்விப்பத்திரகாரர்களால கொடுக்கப்பட்ட குறைந்த அந்நியச் செலாவணி அம்சங்களை உட்படுத்தும் நிவேதனங்கள விசேஷமாகக் கவனிக்கப்படும். இறக்குமதி செய்யவேண்டிய மருந்து வகைகள பற்றிய அந்நியச் செலாவணி ஒதுக்கல அம்மருந்துகள உள்ளூரில் பெறமுடிதல் அல்லது பெறமுடியாதலை எப்போதும் தொடர்புடையதாயிருக்கும்.

7. கேள்விப்பத்திரகாரர் பின்வரும் மூன்றையும் அல்லது தனித்தனியாகவும் விநியோகிப்பதற்குக் கோரலாம்.

கொட்டா வீதி,
கொழும்பு 8.
7.7.69

டபிள்யூ. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுளவேத அபிவிருத்தி அதிகாரி.

அட்டவணை

| சேவை | கேள்விப்பத்திர கட்டுப்பணம் ரூபா | பிணைப்பணம் | கேள்வி முடிவு திகதி |
|---|---|---|---|
| 1.10.69 தொடக்கம் 30.9.70 வரை அனுராதபுர ஆயுள்வேத வைத்திய சாலைக்குக் கீழ்வரும் அட்டவணைப்படி மருந்துச சரக்குகள் விநியோகம் செய்தல்— | | | |
| "A" பச்சையும், பொது மருந்துச் சரக்குகளும் .. .. | "A" 50 | கேள்விப்பத்திர முழுத் தொகையில ஐந்து (5) வீதம் | 18.8.69 |
| "B" உலர்ந்த சரக்குகள் .. .. .. | "B" 50 | | |
| "C" பச்சை மூலிகைகளும் பிறவும் .. .. | "C" 25 | | |

7–1077/2—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

## ஆயுள் வேத இலாகா

### இரத்தினபுரி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு உலர்ந்த பச்சை, பச்சை மூலிகைகள், இதர பொது மருந்துகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ம் திகதி வரையுள்ள காலத்திற்கு உலர்ந்த, பச்சை, பச்சை மூலிகைகள, இதர பொது மருந்துகள் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை இதனுடன் அணைக்கப்பட்ட அட்டவணையிற் குறிப்பிட்ட பிரகாரம் அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு வியாபாரத்தலம், தனிப்பட்ட வியாபாரத்தலம் ஆகியனவுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 18.8.1969 முற்பகல் 10 மணிவரையும கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பத்திரங்கள் அரசாங்க முத்திரையிடப்பட்டு, ஆயுளவேத அதிபர், ஆயுளவேத இலாகா, 325, கொட்டா ரோட், கொழும்பு என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்டு உறையின் மேல் இடதுபக்க மூலையில் கேள்விப்பத்திர சேவையின் தன்மையையும் உறையின்மேல் கேள்விப்பத்திரக்காரரின் பெயர், விலாசத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு ஆயுள்வேத அதிபதி, ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா ரோட், கொழும்பு 8, என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபாலில் ஆயுள்வேத அதிபர், ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா ரோட், கொழும்பு 8, கேள்விப்பத்திர பெட்டியில் சேர்க்கபடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கேள்விப்பத்திரங்களை அனுப்ப விரும்பாத கேள்விப்பத்திரகாரர்கள் தாமாகவோ அல்லது அவரின் பிரதிநிதி மூலமாகவோ நேர்முகமாக அனுப்பி ஆயுள்வேத இலாகாவில் (1 ம் பந்தியிற் குறிப்பிட்டபடி), இதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் உதவிக் காரியதரிசியிடம் கேள்விப்பத்திரங்களை ஒப்படைத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டதும அதற்கென ரசீது கேள்விப் பத்திரகாரர்கட்கு உதவிக் காரியதரிசியால் வழங்கப்படும். குறிப்பிட்ட முடிவு திகதி முற்பகல் 10 மணிக்குப் பின்னர் கிடைக்கும் எக்கேள்விப்பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதைக் கவனிக்குக.

4. கேள்விப்பத்திரகாரர் கேள்விப்பத்திரங்களைத் திறப்பதற்காக குறிப்பிட்ட நேரம், திகதி, இடத்தில் பிரசன்னமாவதற்கு அனுமதிக்கப்படுவர். கேள்விப்பத்திரகாரரின் முன்னிலையில் கேள்விப்பத்திரகாரரின் பெயர்களும் விபரங்களும் வாசிக்கப்படும். கேள்விப்பத்திரகாரர் யாரேனும் தமது கேள்விப்பத்திரத்தைத் திரும்பவும் பரிசீலனை செய்ய விரும்பினால், ஒப்படைக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தின் பிரதியை கேள்விப்பத்திர சபைத் தலைவருடைய ஒழுங்கின்படி மீண்டும் பரிசீலனை செய்ய அனுமதிக்கப்படுவர்.

5. மேலே குறிப்பிட்டபடி 2 வது பந்தியின்படி கட்டுப்பணத்தை கொழும்புக் கச்சேரி தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ அல்லது கொழும்பு, யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியிலோ எனது பெயரில் செலுத்தி, பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு முன்பதாக ஒப்படைக்க வேண்டும். கொழும்பு, யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியிற் கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கான பத்திரங்கள் கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள 325 ம் இலக்கத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணத்திற்கான பத்திரமின்றி பணம் செலுத்த இலங்கை வங்கி அனுமதி அளிக்கமாட்டாது. மனுதாரர் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை ஆயுள்வேத வைத்தியசாலையிலிருக்கும் வைத்திய அதிகாரியின் கந்தோரில் ஒப்படைத்து, தேவையான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தபால்மூலம் கேள்விப்பத்திரம் பெறவிரும்பின் பணம் செலுத்திய பற்றுச்சீட்டை முன்கூட்டியே அனுப்பினால் தகுந்த காலத்தில் அனுப்பிவைக்கப்படும். இதர விபரங்கள் கொழும்பு 8, கொட்டா ரோட், 325 ம் இலக்க ஆயுள்வேத மத்திய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

6. இறக்குமதி செய்யவேண்டிய மருந்து வகைகளுக்கு அவசியப்படின் அந்நியச் செலாவணி ஒதுக்கப்படும். சகல கேள்விப்பத்திரகாரர்களும் தாம் இறக்குமதிசெய்து விநியோகிக்க உத்தேசித்திருக்கும் மருந்து வகைகள் பற்றிய அந்நியச் செலவாணி அம்சத்தையும் ரூபாய்ச் செலவையும் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரகாரர்களால் கொடுக்கப்பட்ட குறைந்த அந்நியச் செலவாணி அம்சங்களை உட்படுத்தும் நிவேதனங்கள் விசேஷமாகக் கவனிக்கப்படும். இறக்குமதிசெய்ய வேண்டிய மருந்துவகைகள் பற்றிய அந்நியச் செலவாணி ஒதுக்கல், அம்மருந்துகள் உள்ளூரில் பெறமுடிதல் அல்லது பெறமுடியாதலை எப்போதும் தொடர்புடையதாயிருக்கும்.

7. கேள்விப்பத்திரகாரர் பின்வரும் மூன்றையும் அல்லது தனித்தனியாகவும் விநியோகிப்பதற்குக் கோரலாம்.

கொட்டா வீதி,
கொழும்பு 8,
1969 ம் ஆண்டு ஜுலை மீ 17 ந உ.

டப்ளியூ. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுள்வேத அபிவிருத்தி ஆணையாளர்.

அட்டவணை

| சேவை | கேள்விப்பத்திர கட்டுப்பணம் | பிணைப்பணம் | கேள்வி முடிவு திகதி |
|---|---|---|---|
| | | ரூபா | |
| 1.10.69 தொடக்கம் 30.9.70 வரை இரத்தினபுரி ஆயுள்வேத வைத்தியசாலைக்குக் கீழ்வரும் அட்டவணைப்படி மருந்துச் சரக்குகள் விநியோகம் செய்தல்— | | | |
| "A" பச்சையும், பொது மருந்துச் சரக்குகளும் .. .. | "A" 50 | கேள்விப் பத்திர முழுத் தொகையில் ஐந்து (5) வீதம் | 18.8.69 |
| "B" உலர்ந்த சரக்குகள் .. .. .. | "B" 50 | | |
| "C" பச்சை மூலிகைகளும் பிறவும் .. .. | "C" 25 | | |

7–1077/3—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

## ஆயுள்வேத இலாகா

### நாவின்ன பண்டாரநாயக்க ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையத்துக்கு உலர்ந்த பச்சை, பச்சை மூலிகைகள், இதர பொது மருந்துகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ம் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ம் திகதி வரையுள்ள காலத்திற்கு உலர்ந்த பச்சை, பச்சை மூலிகைகள், இதர பொது மருந்துகள் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரங்களை இதனுடன் அணைக்கப்பட்ட அட்டவணையிற் குறிப்பிட்ட பிரகாரம் அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு வியாபாரத்தலம், தனிப்பட்ட வியாபாரத்தலம் ஆகியனவுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ந் திகதி முற்பகல் 10 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பத்திரங்கள் அரசாங்க முத்திரையிடப்பட்டு ஆயுள்வேத அதிபர், ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா ரோட், கொழும்பு என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்டு உறையின் மேல் இடதுபக்க மூலையில் கேள்விப்பத்திர சேவையின் தன்மையையும் உறையின்மேல் கேள்விப்பத்திரங்களின் பெயர், விலாசத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு, ஆயுள்வேத அதிபதி, ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா ரோட், கொழும்பு 8 என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபாலில் ஆயுள்வேத அதிபதி, ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா ரோட், கொழும்பு, கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் கேள்விப்பத்திரங்களை அனுப்பவிரும்பாத கேள்விப்பத்திரக்காரர்கள் தாமாகவோ அல்லது அவரின் பிரதிநிதி மூலமாகவோ நேர்முகமாகவோ அனுப்பி ஆயுள்வேத இலாகாவில் (1 ம் பந்தியிற் குறிப்பிட்டபடி), இதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் உதவிக் காரியதரிசியிடம் கேள்விப்பத்திரங்களை ஒப்படைத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டதும் அதற்கான ரசீது கேள்விப்பத்திரகாரர்கட்கு உதவிக் காரியதரிசியால் வழங்கப்படும். குறிப்பிட்ட முடிவு திகதி முற்பகல் 10 மணிக்குப் பின்னர் கிடைக்கும் எக்கேள்விப்பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதென்பதைக் கவனிக்குக.

4. கேள்விப்பத்திரக்காரர் கேள்விப்பத்திரங்களைத் திறப்பதற்காக குறிப்பிட்ட நேரம், திகதி, இடத்தில் பிரசன்னமாவதற்கு அனுமதிக்கப்படுவர். கேள்விப்பத்திரக்காரரின் முன்னிலையில் கேள்விப்பத்திரக்காரரின் பெயர்களும் விபரங்களும் வாசிக்கப்படும். கேள்விப்பத்திரகாரர் யாரேனும் தமது கேள்விப்பத்திரத்தைத் திரும்பவும் பரிசீலனை செய்ய விரும்பினால், ஒப்படைக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தின் பிரதியைக் கேள்விப்பத்திர சபைத் தலைவருடைய ஒழுங்கின்படி மீண்டும் பரிசீலனை செய்ய அனுமதிக்கப்படுவர்.

5. மேலே குறிப்பிடப்பட்ட 2 வது பந்தியின்படி கட்டுப்பணத்தை கொழும்புக் கச்சேரி தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ அல்லது கொழும்பு யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியிலோ எனது பெயரில் செலுத்தி, பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு முன்பதாக ஒப்படைக்க வேண்டும். கொழும்பு யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியிற் கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கான பத்திரங்கள் கொழும்பு 8, கொட்டா வீதியிலுள்ள 325 ம் இலக்கத்திலுள்ள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணத்திற்கான பத்திரமின்றி பணம் செலுத்த இலங்கை வங்கி அனுமதி அளிக்கமாட்டாது. மனுதாரர் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை ஆயுள்வேத வைத்தியசாலையிலிருக்கும் வைத்திய அதிகாரியின் கந்தோரில் ஒப்படைத்து தேவையான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தபால் மூலம் கேள்விப்பத்திரம் பெறவிரும்பின் பணம் செலுத்திய பற்றுச்சீட்டை முன்கூட்டியே அனுப்பினால் தகுந்த காலத்தில் அனுப்பிவைக்கப்படும். இதர விபரங்கள் கொழும்பு 8, கொட்டா ரோட், 325 ம் இலக்க ஆயுள்வேத மத்திய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

6. இறக்குமதி செய்யவேண்டிய மருந்து வகைகளுக்கு அவசியப்படின் அந்நியச் செலாவணி ஒதுக்கப்படும். சகல கேள்விப்பத்திரகாரர்களும் தாம் இறக்குமதிசெய்து விநியோகிக்க உத்தேசித்திருக்கும் மருந்து வகைகள் பற்றிய அந்நியச் செலவாணி அம்சத்தையும் ரூபாய்ச் செலவையும் குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரகாரர்களால் கொடுக்கப்பட்ட குறைந்த அந்நியச் செலாவணி அம்சங்களை உட்படுத்தும் நிவேதனங்கள் விசேஷமாகக் கவனிக்கப்படும். இறக்குமதி செய்யவேண்டிய மருந்து வகைகள் பற்றிய அந்நியச் செலாவணி ஒதுக்கல் அம்மருந்துகள் உள்ளூரில் பெறமுடிதல் அல்லது பெறமுடியாதலை எப்போதும் தொடர்புடையதாயிருக்கும்.

7. கேள்விப்பத்திரகாரர் பின்வரும் மூன்றையும் அல்லது தனித்தனியாகவும் விநியோகிப்பதற்குக் கோரலாம்.

டபிள்யூ. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுள்வேத அபிவிருத்தி அதிகாரி.

கொட்டா வீதி,
கொழும்பு 8,
1969 ம் ஆண்டு யூலை மீ 17 ந உ.

**அட்டவணை**

| சேவை | கேள்விப்பத்திர கட்டுப்பணம் ரூபா | பிணைப்பணம் | கேள்வி முடிவு திகதி |
|---|---|---|---|
| 1.10.69 தொடக்கம் 30.9.70 வரை நாவின்ன ஆயுள்வேத ஆராய்ச்சிச்சாலைக்கு கீழ்குறிப்பிடப்பட்ட அட்டவணைப்படி மருந்துச் சரக்குகள் விநியோகம் செய்தல்— | | | |
| "A" பச்சையும் பொதுமருந்துச் சரக்குகளும் .. .. | 50 | கேள்விப்பத்திர முழுத் தொகையில் ஐந்து (5) வீதம் | 18.8.69 |
| "B" உலர்ந்த சரக்குகள் .. .. .. | 50 | | |
| "C" பச்சை மூலிகைகள் .. .. .. | 25 | | |

7–1077/4—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

## உபயோகமற்ற மோட்டார் வண்டி விலைக்கு வாங்குவதற்கு ஒப்பந்தக் கேள்விகள்

கீழ்க்காணும் இலக்கத்தையுடைய வாகனத்தை வாங்கிக்கொண்டு போவதற்கான ஒப்பந்தக் கேள்விகள் பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 3 சமூக சேவைப் பகுதி ஒப்பந்தக் கேள்விச்சபைத் தலைவரால் 1969 ஆம் வருடம் ஓகத்து மாதம் 9 ஆம் திகதி மு. ப. 9.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும் :—

விலிஸ் ஜீப்—இலக்கம் : ஈ. வை 5606.

2. இவ்வண்டியை இக்கந்தோரில் கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம்.

3. சமூகசேவைப் பகுதித் தலைமைக்காரியாலயத்தில் அல்லது ஒரு கச்சேரியில் ஒப்பந்தக் கட்டுப்பணம் ரூபா 100 கொடுத்துப் பெற்ற பற்றுச் சீட்டைக் காட்டி அவரிடம் பெறும் மாதிரிப்பத்திரங்களில் இரட்டைப்பிரதியில் ஒப்பந்தக் கேள்விகள் எழுத வேண்டும். ஒருவரின் ஒப்பந்தக் கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று எழுதி அனுப்பும் அறிவித்தலைப்பெற்ற 5 நாட்களுக்குள் அவர் தான் விலைகேட்ட முழுத்தொகையையும் கட்டாவிட்டால் அவருடைய கட்டுப்பணம் அரசாங்கத்துக்குரியதாக, வண்டியும் வேறோர் ஒப்பந்தகாரருக்குக் கொடுக்கப்படும். வண்டியைப் பெறுபவர் அதன் முழுத் தொகையையும் கட்டின 3 நாட்களுக்குள் வண்டியை இவ்விடத்தில் இருந்து கொண்டுபோக வேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்வி மாதிரிப்பத்திரங்கள் 1969 ஆம் வருடம் ஓகத்து மாதம் 8 ஆம் திகதி பி.ப 3 மணிவரை கொடுபடும்.

5. ஒப்பந்தக் கேள்விகள் அவை வைத்துள்ள உறைகள் மேல் அரக்கு முத்திரை (சீல்) இடப்பட்டு "மோட்டார் வண்டிகள் விலைக்கு வாங்குவதற்கான ஒப்பந்தக் கேள்வி" என்று குறிக்கப்பட்டு ஒப்பந்தக் கேள்விச் சபைத் தலைவர், சமூக சேவைப் பகுதி, பாலதகஷ மாவத்தை, கொழும்பு 3 என்ற விலாசம் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

6. ஒப்பந்தக் கேள்வி பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்படவேண்டும். பதிவு செய்யப்பட்ட தபாலில் ஒப்பந்தக்கேள்வி அனுப்பவிரும்பாத ஒப்பந்தக்காரர் அதற்கென கொழும்பு 3, பாலதக்ஷ மாவத்தை, சமூக சேவைப்பகுதியில் வைத்திருக்கும் ஒப்பந்தக் கேள்விப் பெட்டியில் தங்கள் கேள்விகளைப் போடலாம்.

7. ஒப்பந்தக் கேள்விகளில் செய்யும் ஒவ்வொரு திருத்தத்திற்கும், அழித்தலுக்கும் அருகில் ஒப்பந்தக்காரர் முதலெழுத்து ஒப்பம் இட வேண்டும்.

8. ஒப்பந்தக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாளுக்குப்பின் நான்கு கிழமை காலத்துக்கு அவற்றில் எவ்வித மாற்றமும் செய்ய ஒப்பந்தக்காரர் கோர மாட்டார்கள் என்று காத்திருக்கப்படுகிறது.

9. ஒப்பந்தக் கேள்விகள் கொழும்பு 3, பாலதக்ஷ மாவத்தை, சமூக சேவை அதிபரின் காரியாலயத்தில் 1969 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 9 ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு திறக்கப்படும்.

10. ஒப்பந்தக்காரர் விரும்பின் அவர்களாயினும் அவர்களுடைய பிரதிநிதிகளாயினும் ஒப்பந்தக் கேள்விகள் திறக்கப்படும்போது சமூகமாய் இருக்க அனுமதிக்கப்படுவர்.

11. 3 ஆம் பந்தியின் நிபந்தனையைக் கவனித்து ஒப்பந்தக் கட்டுப் பணங்கள் திருப்பிக் கொடுபடும்.

12. ஒப்பந்தக் கேள்விகளில் சிலவற்றையேனும், யாவற்றையேனும் நிராகரிக்க அரசாங்கத்துக்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

13. வேண்டிய வேறு விபரங்களைச் சமூக சேவை அதிபரிடம் பெறலாம்.

சமூக சேவை அதிபர்.

சமூக சேவைப் பகுதி,
பாலதக்ஷ மாவத்தை,
த. பெ. எண் 577,
கொழும்பு 3,1969 ம் ஆண்டு யூலை மீ 18 ந உ.

7–1098—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864.

என்து இல. எல்/3/2/9.

## அம்பாறைக் கச்சேரி

கீழ் குறிப்பிடும் வேலைகளுக்காக பொது வேலைத் திணைக்களம், நீர்ப்பாசன இலாகா அல்லது கல்விப் பகுதித் திணைக்களங்களில் கொந்தருத்துக்காரர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், பிரத்தியேகமான கொந்தருத்துக்காரர்களிடமிருந்து 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 6 ம் திகதி காலை 11 மணி வரைக்கும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரால் "முத்திரை" வைக்கப்பட்ட "கேள்விப்" பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. நிந்தவூர் 1 ம் வட்டாரத்தில் வௌவால் ஓடை காணி அபிவிருத்திக்கான பூமிக்குப் போகும் பாதைக்குப் போடுவதற்கு கழியும் கிறவலும் கொண்டுபோதல்.
2. 3 ம் குடியேற்றத்தில் 70 ம் இலக்க வீட்டிற்கருகாண்மையிலிருந்து 3/58, 3/59 ம் இலக்க நெற்காணிகளுக்குச் செல்வதற்கான பாதை அமைத்தல்.

2. இத்தீவில் எக்கச்சேரியிலாவது மேற்கூறிய வேலைகளுக்காக ரூபாய் 10/– (பத்து) கேள்விப் பத்திரப் பணமாக அம்பாறை மாவட்டம் அரசாங்க அதிபரின் பெயருக்குக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திலுள்ள காணிப் பகுதியில் ஒப்புவித்து மேற்குறிப்பிட்ட வேலைகளுக்காகிய கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும், மேலும் 1 ம் பந்தியில் குறிப்பிட்ட சங்கங்களால் இப்பணம் கட்டவேண்டியதில்லை. கேள்விப் பத்திரங்கள் பாரமெடுக்கும் கடைசித் தினத்திற்கு முன்தினம் பிற்பகல் 1 மணிவரைக்கும் கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும்.

3. இரு பிரதிகளில் தெளிவாக நிரப்பப்பட்ட கேள்விப் பத்திரத்தை மாவட்ட அரசாங்க அதிபர், அம்பாறை என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அப்படியில்லாவிடின் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் காரியாலய உதவியாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அடங்கிய தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் மேற்காட்டிய வேலைகள் குறிப்பிடப்படல் வேண்டும். குறிப்பிட்ட பத்திரங்களில் தெளிவாக எழுதப் படாதிருந்தால் அக்கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 6 ம் திகதி முற்பகல் 11 மணிக்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் காரியாலய உதவியாளரின் அறையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அப்படிக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது அவ்விடத்திற்குக் கேள்விப் பத்திரகாரர்கள் அல்லது அவர்களது கடிதத்தால் நியமிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதி ஒருவர் சமூகம் கொடுப்பதற்கு இடமளிக்கப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப் பத்திரகாரருக்கு அதைப்பற்றி அறிவிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் தேவைப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி வேலையைத்

திருப்திகரமாகச் செய்து முடிப்பதற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரகாரர் முழுத்தொகையில் ஐந்து வீதம் பிணைப்பணமாகக் கட்டுதல் வேண்டும். ஏற்கனவே செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறினால் அவர் கட்டிய பணத்தை இழப்பதோடு ஒப்பந்தங்களை மீறுபவருக்கான பட்டியலில் அவரின் பெயரும் இடம்பெற நேரிடும்.

6. அரசாங்க ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்தக்காரர் என அரசாங்கம் தீர்மானிக்கப்பட்டவர் அல்லது வேறெந்தக் காரணத்திற்காகவோ தகுதியற்றவர் என்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் அறிந்தால் தனிப்பட்ட ஒருவரையோ அல்லது சங்கங்களையோ அரசாங்க அதிபரின் அபிப்பிராயத்தின்பேரில் எந்த வேளையிலும் நிராகரிக்க முழு அதிகாரமும் உண்டு.

7. கேள்விப் பத்திரங்கள் அனுப்பும் சங்கங்கள் நிரந்தரமானதென்று தற்போது கடமைசெய்யும் கிராம முன்னேற்ற உப–தலைவர், கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி உதவி ஆணையாளர், அல்லது தொழில் உதவி ஆணையாளர் உட்படச் சார்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்ற பத்திரத்தைக் கேள்விப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்ட சங்கம் கொந்தருத்துச் செய்வதற்குத் தகுதி வாய்ந்ததெனறும் அந்த உத்தியோகத்தரால் சிபார்சு செய்யப்படல் வேண்டும்.

8. எதேனும் ஒரு பகுதியை ஏற்கவோ, நிராகரிக்கவோ அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அதிகாரம் உண்டு.

9. கேள்விப் பத்திரங்களைப் பெற்றவர்கள் அதை முழுவதாகப் பூர்த்திசெய்து மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பாமலிருப்பவர்களுக்கும், குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு ஒவ்வாத முறையில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்ததினால் ஏற்றுக்கொள்ள முடியாத கேள்விப் பத்திரங்களை அனுப்பியவருக்கும் கேள்விப்பத்திரம் சார்பாகக் கொடுக்கப்பட்ட வைப்புப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

10. இதைப்பற்றி மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் அம்பாறை மாவட்டக் கச்சேரியிலுள்ள காணிக்காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

வீ. நாராயணசாமி,
மேலதிக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயம்
அம்பாறை,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 15 ந் உ.

7–1075—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

---

## இலங்கை போக்குவரத்துச் சபை

### 45/46 கலன் கொள்ளளவுள்ள தகரப் பீப்பாக்களின் விற்பனை

கொழும்பு–5, கிருலை வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், வெரகெரையிலும் எல்லா இ. போ. ச. டிப்போக்களிலும் தற்போது விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதும் ஒரு வருடத்துக்கு காலத்துக்குக் காலம் கிடைக்கக்கூடியதுமான 45/46 கலன் கொள்ளளவு உள்ள வெற்று தகரப் பீப்பாக்களையும் கழிவு எண்ணெயைக் கொண்ட தகரப் பீப்பாக்களையும் கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிக்கு முந்திய திகதி நண்பகல் 12.00 மணிவரை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதான பத்திரங்களில், பொறியிட்ட கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்படவேண்டும். கொழும்பு–5, கிருலை வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/–ஐ காசாகக் கட்டி, இதன் பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்குமுன் எனது அலுவலகத்தில காட்ட வேண்டும்.

கேள்விகள், 22.8.1969 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவடையும்.

கேள்வியை காலத் தவணை அடிப்படையில் அளிப்பதற்குச் சபை தீர்மானித்தால், தெரிவுசெய்யப்படும் கேள்விப்பத்திரக்காரர் அல்லது கேள்விப்பத்திரக்காரர்கள், ஒப்பந்தத்தை முறையாகவும் தகுந்த விதமாகவும் நிறைவேற்றுவதற்கான பிணைவைப்புப் பணமாக ஆகக் கூடியது ரூபா 5,000/–ஐ காசாகக் கட்டவேண்டும்.

எல்லா இ. போ. ச. டிப்போக்களிலும் வெரகெரையிலும் விற்பனைக்குத் தற்போது கிடைக்கக்கூடியதான பீப்பாக்களின் தொகைகளை எந்த வேலை நாளிலாவது அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வினியோகப் பகுதி,
200 கிருலை வீதி, கொழும்பு–5.

பிரதம வினியோக உத்தியோகத்தர்.

7–1111—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல.14,864

---

# பொருட்கள், விற்பனையும் பிறவும்

## ஏல விற்பனை

இதன் கீழ்க்குறிப்பிடப்பெற்ற பொருட்கள் கொழும்பு 1, மூதவைக்கட்டடத்திலுள்ள பிரதம அமைச்சர் அவர்களது அலுவலகத்தில் 4.8.69 திங்கட்கிழமை மு. ப. 10.00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| | | |
|---|---|---|
| பழைய புதினப் பத்திரிகைகள் .. | .. 150 | இறத்தல் |
| பழைய ஹான்சாட் பத்திரிகைகள் .. | .. 1,500 | இறத்தல் |
| பழைய சஞ்சிகைகள் .. | .. 500 | இறத்தல் |
| பழைய இலங்கை அரசாங்க கசெற் பத்திரிகைகள் .. | 50 | இறத்தல் |

பிரதம அமைச்சர் அலுவலகம்,
மூதவைக் கட்டடம்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந் உ.

ஆர். வி. வீரக்கோன்,
பிரதம அமைச்சரின் செயலாளர்.

7–1083—25.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,864

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாள்ல் வாத்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1969

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** .. | 6.6.69 | வெள்ளி | .. | 30. 5.69 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.6.69 | வெள்ளி | .. | 6. 6.69 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 20.6.69 | வெள்ளி | .. | 13. 6.69 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 27.6.69 | வெள்ளி | .. | 20. 6.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| **யூலை** .. | 4.7.69 | வெள்ளி | .. | 27.6.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11.7.69 | வெள்ளி | .. | 4.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18.7.69 | வெள்ளி | .. | 11.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25.7.69 | வெள்ளி | .. | 18.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஓகஸ்து** .. | 1.8.69 | வெள்ளி | .. | 25.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 8.8.69 | வெள்ளி | .. | 1.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 15.8.69 | வெள்ளி | .. | 8.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 22.8.69 | வெள்ளி | .. | 15.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29.8.69 | வெள்ளி | .. | 22.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **செத்தெம்பர்** .. | 5.8.69 | வெள்ளி | .. | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.9.69 | வெள்ளி | .. | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19 9.69 | வெள்ளி | .. | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.9.69 | வெள்ளி | .. | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஒற்ரோபர்** .. | 2.10.69 | வியாழன் | .. | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.69 | வியாழன் | .. | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17.10.69 | வெள்ளி | .. | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 24.10.69 | வெள்ளி | .. | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31.10.69 | வெள்ளி | .. | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| **நவெம்பர்** . | 7.11.69 | வெள்ளி | .. | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 14.11.69 | வெள்ளி | .. | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 21.11.69 | வெள்ளி | .. | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28.11.69 | வெள்ளி | .. | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **தீசம்பர்** . | 5.12.69 | வெள்ளி | .. | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி | .. | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | .. | 12.12.69 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | .. | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு யூன் மீ 13 ந் உ

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.